# விடுதலைப்புலிகள்

குரல் : 38 | சித்திரை - 1993 | அன்பளிப்பு : ரூபா 5/


# தமிழர் இனப்பிரச்சினைக்கு பிரேமதாசா அரசின் தீர்வு என்ன?

சிங்களதேசத்து அரசியல் அரங்கில் 'நாடாளுமன்றத் தெரிவுக்குழு' என்ற நாடகம், 20 மாதங்களையும் கடந்து தொடர்ந்த படியுள்ளது.

தமிழரின் தேசியஇனப் பிரச்சினைக்குத் தீர்வு தேடுவது என்ற போர்வையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுமூலம், திரு. பிரேமதாசா அவர்கள் பல அரசியல் திருவிளையாடல்களை நடாத்தி, வெகு கச்சிதமாக உலகை ஏமாற்றி வருகிறார்.

தனது அரசியல் வாழ்வை நீடித்து நிலைக்கச் செய்யவும், சிங்களப் பேரினவாத அரசின் நலன்களைப் பாதுகாக்கவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை பிரேமதாசா நன்கு பயன்படுத்துகின்றார்.

சிங்களப் பேரினவாதத்தின் நலன்களை - அபிலாசைகளை- நிறைவேற்றும் இலக்கைக்கொண்ட இந்த அரசியல் நாடகத்தில், ''ஜனநாயக வழிக்கு வந்த தமிழ்க் கட்சிகள்'' என்ற வேடத்தைத் தமிழ்க்குழுக்களுக்கு வழங்கி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இத் துரோகக் குழுக்களைப் பிரேமதாசா பயன்படுத்துகின்றார்.

சிறீலங்கா நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு தெரிவுக் குழுவை, பிரேமதாசாவின் அரசு அமைத்ததன் நோக்கம், போரை நிறுத்துவதோ அல்லது இனப் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமொன்றைக் கண்டுபிடிப்பதோ அல்ல.

தமிழினத்திற்கு எதிரான இப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதோ, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய நியாயமான தீர்வொன்றை வழங்குவதோ, பிரேமதாசா அரசின் எண்ணமுமல்ல.

மாறாக, போர்மூலம் தமிழர்களைத் தோற்கடித்து, அவர்களை நிரந்தரமாக அடிமை கொள்வதுதான் பிரேமதாசா அரசின் நோக்கமும் விருப்பமும் ஆகும்.

ஆனால், இந்த இன அழிப்புப் போருக்குத் தேவையான பணத்தை அபிவிருத்தி, கடன்கள், பொருளாதார உதவிகள் என்ற பெயர்களில் தான் சிங்கள அரசு வெளியுலகத்திடமிருந்து பெறவேண்டியுள்ளது.

அதேவேளை உலக நாடுகளிடமிருந்து பெறும் பணத்தைக் கொண்டு - வெளிப்படையாக - தமிழர்கள் மீது போரை நடாத்த, சர்வதேச சமூகம் சிங்கள அரசை அனுமதிக்க மாட்டாது. அமைதியான வழிமுறைகளில், இணக்கப் பேச்சுக்கள்மூலம் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையைச் சிங்கள அரசு தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான், சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளாகும். ஆனால், இது சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காத ஒரு விடயம். இருந்தாலும், தமிழ் இனத்திற் →

## உள்ளே ....


- ★ கசியும் தகவல்கள்
- ★ தமிழீழத்தில் நாசவேலைகள்
- ★ கிளாலி கடக்க அனுமதியில்லை. சிங்கள அரசின் நோக்கம் என்ன?
- ★ மேஜர் ஜொனி
- ★ அலைகளின்மீது ஒருஅபாயப் பயணம்
- ★ தமிழீழத் திருநாட்டில்......
- ★ கொதி நிலையில் இந்திய சாம்ராச்சியம்
- ★ சாவு ஒருவனை அழிப்பதில்லை.




தலைவர் பிரபாகரன் அவர்களை பி.பி.சி. வானொலிக்காகச் செவ்வி காணும் திருமதி ஆனந்தி அவர்களும், பி.பி.சி யின் கொழும்பு செய்தியாளர் சியாக்கா நூசு அவர்களும்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# புலிகளின் குரல்

## தமிழரின் தேசிய இனப் பிரச்சினையும் சிங்கள அரசின் இராணுவத் திமிரும்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறைகள்மூலம் தீர்வுகாண அண்மைக் காலத்தில் நாமும், மனிதாபிமான உணர்வுள்ள சில தனிநபர்களும் எடுத்த அரசியல் நகர்வை, பிரேமதாசாவின் அரசு தட்டிக்கழித்து விட்டது.

தமிழின விரோதிகளான கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களே விரக்தியடைந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறும் அளவுக்கு, சிங்கள ஆளும் வர்க்கம் இனப்பிரச்சினைக்கு '' தீர்வு '' கூற விழைந்துள்ளது.

அதுமட்டுமல்ல, தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக அல்ல இராணுவ வழிமுறைமூலமே தீர்வு காண வேண்டும் என்ற கருத்து, சிங்கள தேசத்தின் சகல தரப்பிலிருந்தும் வலியுறுத்திக் கூறப்படுகின்றது. அதனால்தான், அண்மையில் தலைவர் விடுத்த சமாதான சமிக்ஞைகளை பிரேமதாசா அரசு நிராகரித்தபோது, அரசியல் வேறுபாடின்றி அனைத்துச் சிங்களப் பேரினவாதிகளும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இப்போது சிங்கள இராணுவத் தளபதிகள் ஒன்றுகூடி, போர்மூலம் இனப்பிரச்சினையை எப்படி விரைவில் முடிவுக்குக் கொண்டு வரலாம் எனத் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

☆ குடாநாட்டின்மீது பெரியளவில் படையெடுப்பை நடாத்தி புலிகளின் கோட்டையைப் பிடிப்பதா அல்லது

☆ கிழக்கை முழுமையாக ஆக்கிரமித்து கபளீகரம் செய்தபின் வடக்கில் கை வைப்பதா என, அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்காக எவ்வளவு பணத்தைச் செலவிடவும், எத்தனை உயிர்களை அழிக்கவும் சிங்கள அரசு தயாராகவே இருக்கின்றது.

தத்தமது பொருளாதார வர்த்தக நலன்களுக்காக, சிங்கள அரசு நடாத்தும் தமிழர்மீதான போரைச் சில மேற்கு நாடுகள் கண்டுங் காணாது இருப்பதுடன், மறைமுகமாக உதவியும் வருகின்றன.

இதேவேளை, கடந்த சில மாதங்களாக – அதாவது இந்த வருடம் தொடங்கியதிலிருந்து – சிங்கள அரசு தனது இராணுவச் செயற்பாடுகளை மந்தநிலையில் வைத்திருக்கின்றது. இதனுடைய அர்த்தம் போரைத் தீவிரமாக்குவதில் சிங்கள அரசு தயக்கம் காட்டுகின்றது என்பதல்ல.

உண்மையில், போரைத் தீவிரமாகவும் அதிக பலத்துடனும் நடாத்தத் தேவையான முன் தயாரிப்புகளில் கடந்த நான்கு மாத காலமாக அது ஈடுபட்டு வருவதனாலேயே, இந்த மந்தநிலை காணப்படுகின்றது.

கடந்த வருடம் ( 1992 ) படையினர் தரப்பிலேற்பட்ட பெருமளவு உயிரிழப்புகளும் பெருந்தொகையான ஆயுத இழப்புகளும், அவர்கள் மத்தியில் மனச்சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதைப் போக்குவதற்காக படையினர்க்கு ஒரு நீண்ட ஓய்வைக்கொடுத்து, அவர்களைப் பெரும் போருக்குச் சிங்கள அரசு தயார்ப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

அதே சமயம், நவீன ஆயுத தளபாடங்களைப் பெருந்தொகையில் வாங்கிக் குவித்து, தனது படைபலத்தை அதிகரித்தும் வருகின்றது.

புக்காரா, சுப்பசோனிக், MI – 8 ரக உலங்கு வானூர்திகள் மற்றும் நவீனரக டாங்கிகள் என்பவற்றுடன், அதிவேக விசைப் படகுகளையும் கொள்வனவு செய்து, பெரும் படையெடுப்பிற்காகச் சிங்கள அரசு தன்னை ஆயத்தப்படுத்திவருகின்றது. சிங்கள அரசின் இந்த ஆயுதப் பசிக்கு ரஷ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உணவளித்து வருகின்றன.

கொள்வனவு செய்யப்பட்ட இந்த நவீன போர் ஆயுதங்களைப் போர்முனையில் சரியாகப் பயன்படுத்தி, அதிகூடிய அழிவுகளை விளைவிக்கும் எண்ணத்துடன், 'சிங்கள அரசு' இப்போராயுதங்கள் தொடர்பான சிறப்புப் பயிற்சிகளைப் படையினர்க்கு வழங்கிவருகின்றது.

இவ்விதமாக, சிங்களப் படைகளின் நகங்களும் பற்களும் கூர் தீட்டப்படும் இதே வேளை, சிங்கள உயர் தளபதிகள் மத்தியில் இருக்கும் முரண்பாடுகளை – சர்ச்சைகளை – ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து, சிங்கள இராணுவ இயந்திரத்துக்குப் புத்துயிர் ஊட்ட, இக்கால இடைவெளியை ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், களைப்படைந்து – உறுதி குலைந்து – பிரச்சினைகளுக்குள் சிக்கித்தவிக்கும் சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு, இக்கால இடைவெளியில், சிங்கள ஆட்சியாளர்கள் புதிய இரத்தத்தைப் பாய்ச்சிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தமிழின எதிர்ப்பு வெறி கொண்டிருக்கும் சிங்கள இராணுவ பூதத்தைத் துணிவுடன் எதிர்கொண்டு முறியடிப்பதைத் தவிர, தமிழ் மக்களுக்கு வேறுவழியில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக – சமாதானமும் போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் கோரி– விடுத்த வேண்டுகோள்களை, சிங்கள ஆட்சியாளர்கள் நிராகரித்துவிட்டனர்.

போர்மூலம் தமிழினத்தை அடிமைகொண்டு இனப்பிரச்சினையை இல்லாமல் செய்ய, ஆட்சியாளர்கள் முயல்கின்றார்கள்.

சிங்கள அரசு நடாத்தப்போகும் பாரிய படையெடுப்பால் ஏற்படும் இன அழிவைத் தடுத்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், இப்போரை நாம் வென்றேயாக வேண்டும். அவ்விதம் வெற்றிவாகை சூட வேண்டுமாயின் தமிழீழ தேசம் போருக்குத் தயாராக வேண்டும்; தமிழீழ தேசிய இராணுவமான புலிகள் இயக்கம் தனது படைபலத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

புலிகள் இயக்கத்தின் ஆட்பலத்தை அதிகரிப்பதன்மூலம், இதனை நிச்சயமாகச் சாதிக்க முடியும்! ○

## தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செறிவான போரைத் தொடர வேண்டுமாயின், சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்பி, உலக நாடுகளின் அரசுகளையும் திருப்திப்படுத்த வேண்டிய தேவை பிரேமதாசா அரசின் முன் இருந்தது.

இந்தத் தேவையின் குழந்தைதான் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஆகும்.

இந்தத் தெரிவுக்குழுவில் சிங்கள தேசத்தின் பிரதான எதிர்க்கட்சிகளையும் இணைத்துவிட்டதன் மூலம், பிரேமதாசா ஒரு இராஜதந்திர வெற்றியையும் ஈட்டிக் கொண்டார்.

அதாவது, தொடரும் போரால் ஏற்படும் விளைவுகளை பிரதான எதிர்க்கட்சிகள் தத்தமது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுத்துள்ளார். இதனால் போரால் எழக்கூடிய உள்நாட்டு நெருக்கடிகள் தனது அரசுக்கு எதிராக ஒட்டுமொத்தமாகத் திருப்பப்படுவதை, பிரேமதாசா தடுத்து வருகின்றார்; அதன்மூலம் தனது ஆட்சியையும் நீடித்து நிலைக்கச் செய்து வருகின்றார்.

அதேசமயம் 'தமிழர்கள்' என்ற பொதுத்தலையங்கத்தின் கீழ், சிங்களப் பேரினவாதத்தின் அடிவருடிகளையும் தெரிவுக்குழுவுக்குள் உலா வரச்செய்ததன்மூலம், தமிழ்மக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்துதான் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடியலைந்து கொண்டிருக்கிறார்கள் என்ற மாயையை உலக சமூகத்திற்கு ஏற்படுத்துவதிலும், பிரேமதாசாவின் அரசு தீவிரம் காட்டுகின்றது.

இதன்மூலம், இனவாரியாக பூரணத்துவம் பெற்ற ஒரு நடுநிலை அமைப்புத்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்றதொரு மாயத் தோற்றத்தை உண்டுபண்ணி, உலக சமுதாயத்தை வசமாக ஏமாற்றலாம் என்பது பிரேமதாசாவின் கணிப்பு.

ஆனாலும், அண்மையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடுத்த இடைக்கால அறிக்கையைப் பார்த்துவிட்டு, தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என ஒப்பாரி வைத்துக்கொண்டு, இக் குழுக்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை விட்டு வெளியேறியுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த நிலையில்,

தமிழீழ மக்களின் பிரதிநிதித்துவமுமின்றி,

தமிழின விரோதிகளது ஆதரவுமில்லாமல்,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிங்களப் பேரினவாதிகளின் தர்பாராகக் காட்சியளிக்கின்றது.

ஆனாலும் இந்தத் தெரிவுக்குழுவைக் கைவிட பிரேமதாசா தயாராக இல்லை.

'தமிழர்களின் இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு என்னவாச்சு' என்று உலகம் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பைத் தனது தலையிலோ அல்லது தனது அரசின் தலையிலோ சுமத்த பிரேமதாசா தயாராக இல்லை. 'வேலை நடந்துகொண்டிருக்கின்றது' எனச் சொல்வதற்கு, அவருக்கு இந்தப் பொம்மலாட்டம் வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தப்போவதாக, இப்போது பிரேமதாசா சூளுரைத்துள்ளார்.

தமிழரின் தேசியஇனப் பிரச்சினையின் அடிப்படைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு தீர்வுத்திட்டமொன்றைச் சமர்ப்பிக்கவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு தயாராக இல்லை.

எனவே, தமிழரின் தேசியஇனப் பிரச்சினையின் அடிப்படையையே தொட்டுநிற்காத தெரிவுக்குழுவின் யோசனைகளை அடிப்படையாக வைத்து. பிரேமதாசா என்ன திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகின்றார்?

நிச்சயமாக அது தமிழினத்தை அழிக்கும் நாசகாரத் திட்டமாகத்தான் இருக்கும்.

இவற்றிலிருந்து ஒன்றுமட்டும் தெளிவாகின்றது.

தமிழர்களின் அரசியல்அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வை அமைதி வழிமுறைமூலம் வழங்க, பிரேமதாசாவின் அரசு தயாராக இல்லை. இது, பிரேமதாசாவின் நிலைப்பாடுமட்டுமல்ல; இதுதான் சிங்களப் பேரினவாதத்தின் அசைக்கமுடியாத - உறுதியான - நிலைப்பாடாகும். ○

# தமிழீழத்தில் நாசவேலைகள்

**மக்களின் போராட்ட உறுதியை உடைப்பதும், அவர்களைக் குரூரமான முறையில் பழிவாங்குவதும்தான் சிங்கள அரசின் நோக்கம்.**

பொதுமக்கள் மத்தியில் நாசவேலைகள் புரிவதற்கென வெடிமருந்துகளைக் கடத்திவந்தது தொடர்பாக மூவரை, கடந்தமாதம் புலிகளின் புலனாய்வுத்துறையினர் கைது செய்திருந்தனர்; இவர்கள் கடத்திவந்த வெடிமருந்துகளையும் கைப்பற்றியிருந்தனர்.

கற்பூரத்தைப்போன்று நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு கற்பூரப் பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த C-4 எனப்படும் இச் சக்திவாய்ந்த வெடிமருந்து, வவுனியா பாதையூடு வடதமிழீழத்துள் கொண்டுவரப் பட்டிருந்தது.

இவ் விவகாரம் தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளின் பின், இதில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

மாரிமுத்து கந்தசாமி என்ற நபர் தான் இவ் வெடிமருந்து கடத்தலின் சூத்திரதாரி ஆவர். மற்றைய இருவரும் வெடிகுண்டு பற்றிய எவ்வித விபரமும் தெரியாத நிலையில், வியாபாரம் என்றரீதியில் கற்பூரப் பொதிகளுடன் சேர்ந்திருந்த வெடிமருந்தைக் கடத்தி வந்து கொடுத்திருந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடதமிழீழத்தில் இரகசியமான முறையில் குண்டுகளை வெடிக்கச் செய்து, உயிரிழப்புகளை உண்டு பண்ணி மக்களைப் பீதியில் வாழ வைக்கச் சிங்களப் படை முயற்சிக்கின்றது. சிங்களப் பேரினவாதம் புரிந்துகொண்டிருக்கும் தமிழின அழிப்பில் இதுவும் ஒரு அம்சமாகும்

இதன்மூலம் குடாநாடு மற்றும் வன்னிவாழ் மக்களது போராட்ட உறுதியை உடைப்பதும், குரூரமான முறையில் அவர்களைப் பழிவாங்குவதும்தான், இதன் பிரதான நோக்கம்.

சிங்களப் படைகள் விரிக்கும் காசு வலைக்குள் அல்லது சலுகைத்தூண்டிலில் பேராசைகாரணமாகச் சிக்குப்படும் சிலரினதும், உளவாளிகளினதும் துணையுடன், சிங்களப் படைகள் இத்தகைய குண்டுவெடிப்புகளை நடாத்த முயல்கின்றன.

முன்னர் யாழ். பஸ்நிலையத்திலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மக்கள் மத்தியில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அதிர்ஷ்டவசமாக எவரும் கொல்லப்படவில்லை.

ஆனால் கொம்படி, ஊரியான் பாதைவழியே பயணம் செய்த மக்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட குண்டு வெடிப்பில், 9பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள்; பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இதே போன்றதொரு குண்டு வெடிப்பை வன்னி மாவட்டத்தில் மேற்கொள்ள சிங்களப் படையினர் எடுத்த முயற்சியை, இனப்பற்றுமிக்க இருவர் (சிவனு கந்தசாமி, நவரத்தினம் இராசமணி) புத்திசாதுரியத்துடன் செயற்பட்டு முறியடித்திருந்தனர் என்பதும், குறிப்பிடத்தக்கது.

திகிலை உண்டுபண்ணும் முறையில் கொலைகளைச்செய்து, மக்களைப் பயப்பிராந்தியுள் ஆழ்த்தி அவர்களைப் பணியச்செய்வது, சிங்கள அரசு கடைப்பிடித்துவரும் ஒரு தந்திரம்.

1988-1989 ஆண்டுக் காலப்பகுதியில் தென்னிலங்கையில் அரசுக்கெதிராக ஜே.வி. பி. இனர் நடாத்திய கிளர்ச்சியினை ஒடுக்க, சிங்கள அரசு இந்த வழிமுறையைக் கடைப்பிடித்தது. ஆளுங்கட்சிக்கு எதிரானவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட சிங்கள இளைஞர் - யுவதிகளை மர்மமான முறையில் கொலைசெய்து, அவர்கள்மீது ரயர் போட்டு எரித்து, தலையைத் துண்டித்தெறிந்து சிங்கள இனத்தையே பீதியடையச் செய்து, இரத்தவெள்ளத்தில் கிளர்ச்சியை ஒடுக்கினர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தையும் ஒரு வழிமுறையாகக் கொண்டுதான், இன்று தென்தமிழீழத்தில் சிங்களப் படைகள் தமிழின அழிப்பில் ஈடுபடுகின்றன.

''ஜே. வி. பி. இன் காலத்தில் தென்னிலங்கையில் என்ன மாதிரியான சூழல் நிலவியதோ, அதை ஒத்த சூழல் இப்போது கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்றது'' என, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அல்கமசண்டே ஒப்சேவர் (7. 3. 93) பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

88 - 89 ஆண்டுக் காலப்பகுதியில் கொடூரமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, சிங்கள இளைஞர்களைக் கொன்றுகுவித்த இராணுவ அதிகாரிகளுள் அல்கமவும் முக்கியமானவர் என்பது, குறிப்பிடத்தக்கது. இன்று, இவரது தலைமையின் கீழுள்ள கிழக்கு மாகாண சிங்களப் படைகள், தமிழ் மக்கள் மீது எத்தகைய வன்முறைகளைப் புரிந்துகொண்டிருக்கின்றன என்பதை, மேஜர் ஜெனரல் அல்கம தன்னையும் அறியாமல் வெளிப்படுத்தியுள்ளார்.

வடதமிழீழம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் ஜே. வி. பி. மீது பிரயோகித்த படுகொலைப்பாணியை அல்லது தென்தமிழீழத்தில் புரிந்துகொண்டிருக்கும் பீதியூட்டும் இனப்படுகொலைப் பாணியை, இங்கே சிங்களப் படைகளால் செய்ய முடியாதுள்ளது.

இதனால்தான், மக்கள் கூடும் இடங்களில் மர்மமான முறைகளில் குண்டுகளை வெடிக்கச் செய்தும், கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்களை - எறிகணைத் தாக்குதல்களை - நடாத்தியும், வடதமிழீழ மக்களைப் பீதிக்குள் வாழவைக்கச் சிங்களப் படைகள் முயற்சிசெய்கின்றன. இதன்மூலம் இப்பகுதி மக்களின் போராட்ட உறுதியை உடைத்து, வடதமிழீழம் முழுவதையும் ஆக்கிரமித்து, தான் விரும்பியவாறு இன அழிப்பில் ஈடுபடலாம் என, சிங்களப் பேரினவாதம் கனவும் காண்கின்றது.

தமிழினத்தின் உறுதியையும், விடுதலைத் தாகத்தையும் சிதைத்துவிட முயலும் சிங்களப் பேரினவாதிகளின் இந்த விருப்பத்தை, எச்சரிக்கை உணர்வுடனும் விழிப்புணர்வுடனும் ஒற்றுமையுணர்வுடனும் இருந்து முறியடிப்போம்! ○

## சந்ததிகள் சந்திக்கின்றன!

சருகும், தளிரும் சந்தித்துக் கொண்டன.
தலைவனின் பாதையில் சங்கமமாயின.
உதிரப்போகும் பழுத்த இலையின்,
குருதிக்கலன்கள் குமுறத் தொடங்கின.
பொக்கைவாயை மெல்லத்திறந்து,
' புதிய வேதம் ' தளிருக்குரைத்தது.

" இந்த மண்ணை எதிரியின் கையில்
எப்படிக் கொடுத்து இருப்பது மகளே!
மரத்தடி நிழலில் அகதியென்றாகி
மடிவது இன்னும் எத்தனை காலம்?
காலை விடியும் நேரம் வந்தது;
கையில் உனக்குக் கருவியைத்தந்தது.
நட, நட மகளே! நானும் வருவேன்.
நாட்டினுக்காக...உயிரையும் தருவேன்".

— புதுவை இரத்தினதுரை



# அலைகளின் மீது ஒரு அபாயப் பயணம்

மாலை நேரம்.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மக்கள் வெள்ளம்·

சில வாரங்களாகப் படகு ஓடவில்லை. ''நாளை வழமை போல் 'கிளாலி' படகுச்சேவை நடைபெறும்'' எனும் அறிவித்தலைப் பத்திரிகைகளில் பார்த்த மக்கள், ரிக்கற்வாங்கிப் படகில் இடம்பிடிக்க வென்று ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கானோர் முண்டியடித்துக்கொண்டு, ரிக்கற் கொடுக்கும் வரிசையில் நின்று ரிக்கற் எடுக்கின்றனர்.

சற்றுத்தள்ளி,

'' பெடியள் பாதுகாப்பு குடுப்பாங்கள் தானே...... எதுக்கும் நான் கைகாவலுக்கு எண்ணைக் கான் கொண்டுவந்தனான் நீங்கள் கொண்டு வந்தனிங்களோ''?

''மச்சான் மண்ணெண்ணை அடிச்கிட்டியே ..... அடிக்காட்டி கொஞ்சம் கூட அடி. இந்த முறை யாவது இரண்டு ட்றிப் ஓடினால் தான் அடுத்ததடவை படகு ஓடும் வரை சமாளிக்கலாம். எதுக்கும் இண்டைக்கு எத்தனையாவது ரேண் எண்டு கேட்டுப் பதிஞ்சு கொண்டு வாறன்.''

''பெடியள் பாதுகாப்புக் குடுக்கிற இரண்டொரு நாளுக்குள்ள போய், ஓமந்தையில கொஞ்சச் சாமான் தன்னும் கட்டி வந்தால் தான் சரி.''

''ஆனையிறவையும் மறிச்சு வைச்சு, பூநகரியையும் தடுத்து வைச்சுக்கொண்டு கிளாலிக்கடலாலையும் போக விடுறாங்களில்லை..... எளிய அரசாங்கம்......''

இப்படித்தான் ஒவ்வொருவரும் கதைத்துக்கொண்டு தங்களைத் தயார்ப்படுத்துகிறார்கள்.

மாலை மங்கி இருள் கவிகிறது.

''குருவி கிளியர்பண்ணப் போட்டுது. இனிச் சனத்தை விடட்டாம்'' என அறிவித்தல் கிடைக்கிறது.

மக்கள் முண்டியடித்துக் கொண்டு வரிசையில் நிற்கிறார்கள். ரிக்கற் ஒழுங்கின்படி பெயர், முகவரி, செல்லும் இடம், தொழில், வயது என்பன பதியப்பட்டு 20 பேருக்கு ஒரு படகு என்ற முறையில், மக்கள் விடப்படுகின்றனர். அதில் நானும் ஒருவன்.

கடலை நெருங்க நெருங்க......

> 'பதின்நான்கு மைல் தூரம் கடல்; சுமார் இரண்டரை மணிநேரப் பயணம்....அதுக்குள்ள கண்போட் வந்திட்டா......

நேவி வெட்டிச்...... சுட்டு

சீச்சீ !அப்படி ஒண்டும் நடவாது; நடக்கக்கூடாது.'

என்றாலும் மனம் அமைதியடைய மறுத்து மீண்டும் மீண்டும், இக்கடல்நீரேரியில் நடந்த கோரப் படுகொலைகளை ஒரு தடவை...... ஏன், பலதடவை அசை போடுகிறது!

இந்தவருட ஆரம்பத்தில் ஒரு நாள் - ஒரே இரவில் சுமார் 75 பேர் கொல்லப்பட்ட அந்தப் பயங்கரம் - இதேபோல இன்னும் எத்தனை சம்பவங்கள்!

'வெட்டுக்காயங்கள், உருக்குலைந்து துர்நாற்றம் வீசிய சடலங்கள், அடையாளம் காணமுடியாமல் ஊதி அநாதரவாகக் கரையொதுங்கிய உடல்கள்.'

பயத்தில் ஒருகணம் கண்ணை மூடித்திறந்து மனதை ஒருநிலைக்குக் கொண்டுவர முயல்கின்றேன். ஆனாலும் இடையிடையே மீண்டும் அந்தப் பழைய சம்பவங்கள்...... கடற்கரையைப் பீதிகலந்தபார்வையுடன் நோக்குகிறேன். பயணம் புறப்படமுன் இருந்த கலகலப்பு இப்போது குறைந்துவிட்டது; எல்லாருடைய முகங்களும் சற்று வெளுத்துக் கிடக்கின்றன.

''அண்ணை பாக்கை (பைகளை) இஞ்ச கொண்டுவாங்கோ. அணியத்துக்குள்ள வைச்சாத்தான் நனையாது.இண்டைக்குக்காத்து எழும்பி நிக்குது. படகுக்குள்ள தண்ணியள்ளி ஊத்தும்'' என்றுசத்தமிட்டவாறு, எனது 'பாக்'கையும் வாங்கி அணியத்துக்குள்ளே அடுக்குகிறான்.

சற்றுத்தள்ளி ஒரு தாய் ''தம்பி டேய், கான்கவனம்,கையில்எடுத்து வைச்சுக்கொள்'' என்று தனது மகனை அதட்டும் சத்தம் கேட்க, எனது கை தன்னிச்சையாகவே நான் கொண்டுவந்த 'பிளாஸ்ரிக் கானை' ஒரு தடவை தொட்டுச் சரிபார்க்கிறது. ஆம்! இந்த வெற்றுப் பிளாஸ்ரிக் கான்கள் தான் இக் கடலில் உயிர்காக்கும் மிதப்புக்கட்டைகள்.

பாக்குகள் எல்லாம் அணியத்துக்குள் வைக்கப்பட்ட பின், படகு தள்ளப்படுகிறது. நீர் மட்டம் உயர்ந்து ...... உயர்ந்து ஒரு குறிப்பிட்டளவு உயர்ந்ததும், பெண்களும் சிறுவர்களும் படகிற்குள் ஏறுகின்றனர். ஆண்கள் மீண்டும் படகைத் தள்ளுகின்றனர். மீண்டும் நீர்மட்டம் உயர்கிறது. உயர்ந்து இடுப்பிற்குச் சற்றுக் கீழே நீர்மட்டம் வரும்வரை தள்ளிவிட்டு, ஆண்களும் படகிற்குள் தாவி ஏறுகின்றனர்.

படகு ஒருகணம் தளும்பிப் பின் சுதாகரித்துத் தன்னைச் சமநிலைப் படுத்துகிறது.

பெற்றோல் காட்டப்பட்டு (விடப்பட்டு) எஞ்சினை இயக்கக் கயிறு இழுக்கப்படுகிறது. மீண்டும் மீண்டும் பெற்றோல் விடப்பட்டு எப்படியோ பல இழுவைகளிற்குப் பின், எஞ்சின் இயங்கி நிற்கிறது. பின் மீண்டும் பெற்றோல் விடப்பட்டுக் கயிற்றைஇழுக்க, எஞ்சின் இயங்கத் தொடங்குகிறது. இப்போது எல்லோரது மனங்களும் ஒரு இறுகிய நிலையில் இருந்தன.

ஒருபக்கம் ஆனையிறவு முகாம்; மறுபக்கம் பூநகரி முகாம். இரண்டுக்குமிடையே வாழ்க்கைப் பயணம். ஒவ்வொரு அலையினையும் எதிர்த்து - கிழித்து - உயர்ந்து - படகு ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு அலையையும் படகு எதிர்க்கும்போதும் அந்த அலைநீர் படகிற்குள் வெள்ளம் போல் வீழ்கிறது. படகிற்குள் உள்ள அனைவருமே தெப்பமாக நனைகின்றனர். குளிரால் கைகால்கள் விறைக்கின்றன. கண்கள் எரிகின்றன. ஏன், நாவில் கூடக் கடல்நீரின் கசப்பு. ஆனாலும் ஒருவரும் கண்மூடவில்லை.

பார்வைமட்டும் இருளைக்கிழித்து வெகுதூரம் ஊடுருவுகிறது. தன்னால் எவ்வளவுதூரம் பார்க்க முடியுமோ அவ்வளவு தூரம் பார்த்து, இன்னும் சற்றுத் தூரம் பார்க்க முயற்சி எடுக்கிறது.

ஒவ்வொருவரின் மனமுமே மா தூரத்தில் எங்காவது ஒரு 'கண் போட்' அல்லது ஒரு கரும் பொட்டு ஏதாவது தெரிகிறதா ...... என அங்கலாய்க்கின்றது. தெரியவில்லை· தெரியக்கூடாது என விரும்பினாலும் விழிகளோ கடல் மட்டத்தை நோக்கி, இருளைக் கிழித்து, வெகுதூரம் எதையோ தேடி அலைகின்றன. அந்த எஞ்சின் சத்தத்தைமீறியும் ஒவ்வொருவரதும் இருதயம் துடிக்கும் ஒலி, மற்றவருக்குக் கேட்கக்கூடியளவிற்கு இருக்கிறது.

அப்போது கடலை வெட்டிக் கிழித்துக்கொண்டு, இரு பெரிய விசைப்படகுகள் கண்மூடி விழிக்கும் நேரத்தில் மறைகின்றன. படகிற்குள் உள்ள யாவரையும் திகில் கௌவுகிறது.

'' பயப்படாதீங்கோ ... அது எங்கடபெடியளின்ர கண்போட். அது தான் எங்கட குருவி''


- ஓட்டி சொல்கிறான்.

சுமார் ஒரு மணித்தியாலம் சென்றிருக்கும்.

ஆழமான கடற்பிரதேசம்.

பூநகரிப் பக்கமிருந்து 'பரா வெளிச்சம்' வானில் ஏவப்படுகிறது. அதைத் தொடர்ந்து கடற்பரப்பை நோக்கி 'சேர்ச்லைற்' பாய்ச்சப்படுகிறது.

எல்லோர் மனதிலும் பீதி. ''மச்சான்இந்தஇடத்தைக் கடக்கும் வரை கொஞ்சம் கூட்டிப்பிடி.''



அப்போது கண்கள் கடல் மட்டத்தை நோக்கி, வெளிச்சம் வந்த திசையில் வெகுதூரம் ஊடுருவுகின்றன.கடல்மட்டத்தில் வெகுதூரத்தில் இரண்டு, மூன்று கரும் பொட்டுக்கள். இவற்றைக்கண்டு'' ஐயோ'' என்ற ஏக்க ஒலியும் படகிற்குள் எழாமலில்லை. வரவர அந்தக் கரும் பொட்டுக்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

அந்நேரத்தில் -

என்மனம் இக்கடலில் நடந்த பழைய சம்பவங்கள் - கொலைகள் - அப்படி எனக்கு ஏதாவது நடந்தால் - அநாதரவாக ஒதுங்கி உருக்குலைந்து ...... மயிர்க்கூச்செறிகிறது. ஒருகணம் தன்னிச்சையாக மூடிய விழிகள், மீண்டும் அந்த வளர்ந்து வரும் கரும் பொட்டுக்களைப் பீதியுடன் நோக்குகின்றன.

அப்போது ஓட்டி சொல்கிறான் '' கண்போட் வருகுது போலக்கிடக்குது. கிட்டவந்தால் ...... எல்லோரும் கானோடு குதியுங்கோ '' - இது அவனது பரபரப்புடன் கூடிய எச்சரிக்கை.

'' ஐயோ கடவுளே ! இந்த அநியாயப்பட்டவன்கள் வாறான்களாக்கும் '' - இது பயணிகளின் இயலாத தொனி.

திடீரென வெடிச்சத்தங்கள். சில ரவைகள் எமது பக்கமாயும்- ஏன், எமது படகிற்கு மிக அருகிலும் காற்றைக் கிழித்துக்கொண்டு செல்கின்றன.

'' பெடியளிற்கும் நேவிக்கும் இடையில சண்டை நடக்குது போல கிடக்குது ''

- படகிற்குள் இருந்த ஒரு இளைஞன் சொல்கிறான்.

படகிற்குள் இருந்த அனைவரும் குப்புற விழுந்து படுக்கிறார்கள். எல்லாருடைய மனமும் தத்தமது வாழ்வின் கடைசிக் கணங்களை நோக்கிச் செல்கின்றது. என் மனதும் எனது வாழ்வையும், எனது வாழ்வில் நடந்த சம்பவங்களையும், இப்போது இக்கடலில் அநாதரவாகச் சாகப்போகிறேனே என்ற தவிப்பையும் கொண்டு கலங்குகிறது.

ஒருவர்கூடத் தலையை நிமிர்த்திப் பார்க்கவில்லை. எஞ்சின் நிற்பாட்டப்பட்டதனால் படகு தள்ளாடுகிறது. ஒவ்வொரு அலையும் படகைத் தூக்கித்தூக்கிப் போடுகிறது.

வெடிச்சத்தம் நின்ற பின்னும் கொஞ்சநேரம் ஒருவரும் தலையைத் தூக்கவில்லை. பின் அமைதி நிலவவே, எல்லாரும் தலையைச் சற்றுத்தூக்கிக் கடற்பரப்பை அலசுகிறார்கள்.

'கண்போட்' ஓடிவிட்டது என்பதை அறிந்த பின், ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் கடலை வெறித்தபடி இருக்கின்றனர்.

பின் படகு 'ஸ்ராட்' பண்ணப்பட்டு மீண்டும் அலையை எதிர்த்து- கிழித்து - உயர்ந்து - ஓடிக் கொண்டே இருக்கிறது.

சுமார் அரைமணித்தியால ஓட்டத்திற்குப் பின் கரையிலிருந்து கொளுத்தப்பட்ட 'சூள்' வெளிச்சம் தெரிய, எல்லாரது முகங்களும் அவ்விருளில்கூடப் பிரகாசிக்கின்றன. இப்போது கடல் நீர் பழைய மாதிரி எழுந்து படகிற்குள் வீழ்ந்த போதும், ஒருவருக்கும் குளிரவில்லை. கண்கள் எரியவில்லை. ஏன், நாகூடக் கசக்கவில்லை.

வெளிச்சம் வரவரப் பெருத்து, இறுதியில் வெளிச்சத்திற்கு மிக அருகில் வந்ததும், மணற்பிட்டி தட்டிப் படகு நிற்கிறது.

'' ஆம்பிளையள் எல்லோரும் இறங்கிப் படகைத் தள்ளுங்க.''

ஓட்டி சொன்னதும், எல்லாரும் குதித்து உற்சாகத்துடன் படகைத் தள்ளுகிறோம். சேற்றினுள் கால்கள் புதையப் புதையத் தள்ளி ஒருவாறு கரையை அடைகிறோம்.

கரையை அடைந்த நான் எனது 'பாக்'கையும் எடுத்துக்கொண்டு நடக்கின்றேன். கால்கள் நடக்கின்றன; ஆனால் மனமோ சற்றுமுன் கடலில் எனது வாழ்வின் இறுதிக் கணங்கள் வரை சென்ற சம்பவங்களை, அசைபோடுகிறது

அப்போது, அருகில் இருந்த சாப்பாட்டுக் கடையொன்றில் ஒலித்த -

''விழிதூங்க மறந்திங்கு விசைப் படகைப் பார்த்திருந்து, கதை முடித்த எம்தோழர் சேதியினைத் தாங்கிவரும்'' எனும் பாடல்,ஒலிக்கிறது,


முன்னரே நான் கேட்டுப் பாடமாக்கிய பாடல்தான். ஆனால் இப்போது, ஒரு புதிய அர்த்தத்துடன் அப்பாடல் எனதுகாதில் நுழைகின்றது!

— முகுந்தன்

# சாவு ஒருவனை அழிப்பதில்லை!



'அன்பு'வின் சாவு எங்களது மனங்களை உலுக்கிய ஒரு நிகழ்வாக அமைந்தது. மானிப்பாய் – சாவற்காட்டில், இந்த மறக்கமுடியாத நிகழ்வு 16-4-1985 அன்று நடந்தது. மனிதகுலத்தையே வியக்க வைக்கும் புலிகளின் தியாக ஏட்டில், இவனுக்கென ஒரு தனி இடமுண்டு. அன்பு வீரச்சாவடைந்த போது, தளபதி கிட்டுவும் அருகிலிருந்தார். அன்புவை நினைவு கூர்ந்து 'களத்தில்' சஞ்சிகையில் தளபதி கிட்டு அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து...




**அன்பு**
(மூத்ததம்பி தனபாலசிங்கம்)
வெற்றிலைக்கேணி
*பிறப்பு:* 20-05-1960

1

'ஓ' எம் தோழா, உன் அன்பான நடத்தையால், உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம். எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னைச் சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றம் உடையவன் என்றோ, நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும், திடவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்க முடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்தி கேட்டு, உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர், சொல்ல முடியாதது. உன் வீரஞ்செறிந்த தியாக வரலாறு ஒவ்வொரு மக்களும் அறிய வேண்டியது.



3

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது, குருநகர் இராணுவ முகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடை செய்யும் பெரும் பணியை, செவ்வனே செய்து முடித்தவன். இராணுவத்தினர் இரவு ரோந்துக்குப் புறப்படும் முன், கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கும்வரை அமைதியைப் பேண வேண்டியபொறுப்பானவேலைக்காக, வெடிமருந்தில் (Explosive) தேர்ச்சி பெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.

வெற்றிகரமாக கண்ணிவெடிகளை நிலைப்படுத்திய அன்பு, G3A3 என்ற தானியங்கி றைஃபிளைத் தாங்கி, பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கியதும் முகாமைவிட்டு வெளிவந்த இராணுவத்தினர் மீது G3A3 ஆல் சரமாரியாக ''இந்தா''... ''இந்தா'' என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை, இப்போதும் தோழர்கள் நினைவுகூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறும்வரை, மிகப் பலம் பொருந்திய குருநகர் முகாமிலிருந்து எந்த ஒரு கவச வாகனமோ அல்லது இராணுவப் பிரிவோ வெளியேறாமல் தடுத்து, எம் வெற்றிக்கு உறுதி அளித்தவன் அன்பு.

நாம் தாக்குதல்களுக்குச் செல்லும்பொழுதெல்லாம் 'றொக்கட் லோஞ்சரை' அன்புதான் எடுப்பான். அதைத் தூக்கிச்செல்லும் உடல்வலுவும் சிறந்த பயிற்சியும் அன்பிடம் இருந்ததால், அவனை நாம் ''டேய்! லோஞ்சர்'' என்று அன்பாக அழைத்தோம்.

அன்று காலை நாம் எல்லாருமாகக் காலை உணவருந்திக் கொண்டிருக்கின்றோம். வெளியில் இருந்து வந்த அன்பு, தானும் எம்முடன் சாப்பிடுவதற்காக எம்முடன் பாயிலிருந்துசாப்பிடத்தொடங்குகின்றான்.

அவனுடைய பார்சலில் ஒரு வடை இருந்ததைக் கண்ட மற்றைய நண்பன், அதைப் பாய்ந்து எடுத்தான். அன்பான பறிபாடு, அன்பான ஒப்பந்தம், அன்பான பங்கிடல் மூலம் வடையைப் பங்கிட்டுக் கொண்டு மிகச் சந்தோசமாக, குதூகலமாக உணவருந்திக் கொண்டிருந்தார்கள்.

கீழே பாயிலிருந்து சாப்பிடுவதால் தான் இடுப்பில் அணிந்திருந்த கைக்குண்டை அன்பு வெளியே எடுக்கும்போது, கைக்



2

குண்டின் தடை நீக்கப்பட்டு விட்டது. அன்புவின் முகம் மாறுகின்றது. கைக்குண்டை உடனே வெளியே எறியவேண்டும். வெளியிலும் தோழர்கள் அமர்ந்திருந்தனர்.

உடனே தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக் கொண்டான்; வெடியதிர்வுகளோ அல்லது குண்டுச் சிதறல்களோ மற்றைய தோழர்களைப்பாதிக்க விடாமல், அவை அனைத்தையும் தன் உடலால் ஏற்றுக் கொண்டான்.

''டமார்'' என்ற பெரிய சத்தம்.

புகை மண்டலம்.

நாம் தூக்கி வீசப்பட்டோம். புகை விலகிய போது.

'ஓ......கோரம்'.

அறை எங்கும் இரத்த வெள்ளம்.

அறைகளில் எல்லாம் சதைத் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

கைக்குண்டால் துண்டாடப்பட்ட உடலின்பாகங்கள். மூன்று துண்டுகளாக்கப்பட்ட உடல்... எம்மையெல்லாம் காப்பதற்காக தன்னுடைய உடலால் வெடிகுண்டைத் தாங்கிய அன்பு, துண்டுகளாகக் காணப்பட்டான்.

எம்மோடு பேசிக்கொண்டிருந்தவன் – சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் – திடீரென்று துண்டுகளாகக் கிடக்கும்போது எப்படித்தான் எம்மால் ஜீரணித்துக் கொள்ள முடியும்?

உடலை அகற்றும்போது அன்புவின் டயறியின் பக்கங்கள் இரத்தத்தில் தோய்ந்து காணப்பட்டன.

அதில் ஒரு பக்கத்தில், ''மரணம் ஒருவனை அழிப்பதில்லை'' என்ற வசனம்




4

காணப்பட்டது. ஆம், அன்புவின் மரணம் – தியாகம் – இன்னும் எத்தனையோ, 'அன்புகளை' உருவாக்கியிருக்கின்றது!

— கேணல் கிட்டு ○

# மேஜர் ஜோனி



எங்களால் என்றுமே மறக்க முடியாத அந்த இருள் சூழ்ந்த நாட்கள்.

இங்கே ''அமைதி தேடுகின்றோம்'' என வந்து – அக்கிரமங்கள் புரிந்த இந்தியத் துப்பாக்கிகளின் ஆட்சிக்காலம்.

வன்னியில், கருப்பட்ட முறிப்பு என்ற சிற்றூர்ப் பொறுப்பாளனாக ஜோனி இருந்தான்.

ஒரு நாள் – அப்போதைய எமது பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த மிதி வண்டியில் போய்க்கொண்டிருக்கிறான். அவன் சென்றுகொண்டிருந்த பாதை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் சந்திக்கின்ற மூலை. மிதிவண்டி வளைவில் திரும்பவும் பதுங்கியிருந்த இந்தியப் படையினர் அவன்மீது பாயவும் சரியாக இருந்தது.

எதிர்பாராத தாக்குதல் – கண்ணிமைப் பொழுதிற்குள் அவன் செயற்பட்டான். தன்னைப் பிடிக்க வந்த படையினர்மீது மிதி வண்டியைத் தூக்கி வீசினான்; அருகில் பதுங்கியிருந்தவர்கள்மீது கைக்குண்டுகளை வீசினான். தப்பி விடுகிறான் ஜோனி.

இந்தச் சம்பவத்தில் 2 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படியாக – அந்த ஊரில் ஜோனி அரசியல் வேலை செய்த நாட்களில் – அடிக்கடி இந்தியப் படையினரைச் சந்தித்திருக்கிறான். அவை ஒவ்வொன்றும் மயிர்க் கால்களைக் குத்தி நிமிர வைக்கும் சம்பவங்கள். அப்போதெல்லாம் அவன் ஒரு புலிவீரனுக்கே இருக்கக்கூடிய சாதுரியத்துடன் தப்பிவிடுவான்.

அந்த ஊரில் – மிகவும் நெருக்கடியான அந்தக் காலகட்டத்தில், கடினமான ஒரு சூழ்நிலைக்குள் நின்று அவன் போராட்டப் பணிகளை ஆற்ற வேண்டியிருந்தது. இந்தியப் படையினரும், இந்திய அடிவருடிகளும் எங்கும் நிறைந்திருந்த அந்த நாட்களில் கிராமங்களிலோ, நகரங்களிலோ அரசியல் வேலை செய்வதென்பது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

காடுகள், ஆறுகள், குளங்கள், வயல் வெளிகளினூடாக மைல் கணக்கான தூரங்களிற்கு அவனது கால்கள் நடக்கும். தனது பொறுப்பாளர்களால் ஒப்படைக்கப்படும் வேலைத் திட்டங்களை, இவ்வாறாகச் சிரமப்பட்டுத்தான் அவன் செவ்வனே செய்துமுடிப்பான்.

கருப்பட்ட முறிப்பு என்ற அந்த ஊர், எங்களது போராளிகளின் அணிகள் பொருட்கள், ஆயுதங்கள், ஆவணங்கள், என்பவற்றோடு, முக்கிய தகவல்களையும் பரிமாறுகின்ற பிரதான இடங்களுள் ஒன்றாக இருந்தது. போராட்டத்தின் 'பெறுமதி மிக்க' இவ்வகையான வேலைகளுக்காக, இந்த ஊருக்கு வருகின்ற போராளிகளை ஜோனி, மிகுந்த இடர்களுக்கு நடுவில் பாதுகாத்துப் பராமரித்திருக்கிறான்.

இந்தியர்கள் வளைத்து நிற்கும் போதே கிராமத்துக்குள் நுழைந்து, போராட்டக் கருத்துக்களடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டோ, பிரசுரங்களை விநியோகித்துவிட்டோ மிகச்சாதுரியமாகத் தப்பி, அவர்களின் முற்றுகைக்குள்ளிருந்து ஜோனி வெளியேறிய சம்பவங்கள் பல உண்டு.

மாணவர்கள், பெண்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் எனச் சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்குள்ளும் நுழைந்து, ஜோனி போராட்டக் கருத்துக்களை விதைத்தான். இதன்மூலம் – இளைஞர்களையும், பெண்களையும் பெருமளவில் போராட்டத்தோடு இணைத்தான்.

1989ஆம் ஆண்டு எமதுதேசம் மாவீரர் நாளை முதற்தடவையாக அனுஷ்டித்த போது, கருப்பட்டமுறிப்புப் பகுதியில் அதனைச் சிறப்பாக நடத்தினான். தம்மை நோக்கி இந்தியர்களின் துப்பாக்கி முனைகள் நீண்டிருந்தபோதும், அந்த மக்கள் உணர்வுபூர்வமாக அந்நாளை அனுஷ்டித்தனர். அந்த அளவுக்கு ஜோனி அவர்களோடு இரண்டறக் கலந்து, அவர்களைப் போராட்டத்தின்பால் ஈர்த்திருந்தான்.

அவனையும், தோழர்களையும் ஆபத்து நெருங்கி வந்த பல சந்தர்ப்பங்களில், அவன் நேசித்த இந்த மக்கள்தான் அவர்களுக்குக் கவசமாக நின்றிருக்கின்றார்கள்.



## போராளியின் குருதிச்சுவடுகள்

**மேஜர் ஜோனி**
*(நாகநாதி ஜெகதீஸ்வரன்)*
*மீசாலை வடக்கு, மீசாலை.*
பிறப்பு: 19-08-1969
வீரச்சாவு: 07-08-1991

1990இன் ஆரம்பம். இந்தியர்கள் எங்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றப் பட்டுக்கொண்டிருந்தனர். இவனது திறமையான செயற்பாடு காரணமாக இவன் மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். போர் நின்றிருந்த அந்த நாட்களில் மக்களிடையில் அரசியல் வேலைத்திட்டங்கள் வேகமாக நடைமுறைப் படுத்தப்பட்ட போது, ஜோனி அவ்வேலைகளைச் சிறப்பாகச் செய்துமுடித்தான்.

கிராம அபிவிருத்தி வேலைகள், சிறுவர்களுக்கு கல்வி வசதிகள் செய்தல், பெண்களுக்காக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என இவனது செயற்பாடுகள் வளர்ந்தன. அந்த நாட்களில் சின்னக் குழந்தைகள்முதல் ஆச்சி அப்புவரை, மக்கள் ஒவ்வொருவரோடும் இவன்நெருக்கமான உறவுகளை வளர்த்திருந்தான். அவர்களால் என்றுமே ஜோனியை மறந்துவிட முடியாத அளவுக்கு அது இருந்தது.

1990இன் நடுப்பகுதி. சிறீலங்காப் படையினருடன் இரண்டாவது ஈழப் போர் ஆரம்பித்தது. சண்டைக்குப்போகவேண்டும் என்ற ஜோனியின் ஆவலைப் பூர்த்திசெய்யும் களமாக, அது அமைந்தது.

மாங்குளம் இராணுவ முகாம்மீதான முதலாவது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எனினும், வெற்றியீட்டமுடியாமல் போய்விட்ட அந்தத் தாக்குதலின்போது, ஜோனி காலில் காயமடைந்தான்.

காயம் மாறி, வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டுப் பணியாற்றிக்கொண்டிருந்தபோதும், என்றைக்காவது 'ஒரு நாள் இந்த முகாமை நிர்மூலமாக்கியே ஆகவேண்டும்' என்ற வேட்கையே, அவனுள் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அந்த நாளும் வந்தது. இரண்டாவது தடவையாகவும், இறுதியானதாகவும் மாங்குளம் இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், ஜோனி பெரும் பங்காற்றினான். அந்தத் தாக்குதலின் வெற்றி ஜோனியைப் பூரிப்படைய வைத்தது.

இந்தத் தாக்குதல் முடிந்து சிறிது காலத்தின் பின், அவனது நீண்டநாள் கனவு நனவானது. அரசியல் வேலையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு அவன் சமர்முனைக்கு அனுப்பப்பட்டான். அந்த நாட்களில் அவனைக் காண்கின்றபோது ஓர் ஆத்ம திருப்தி அவன் முகத்தில் தெரிந்தது. ஒரு சின்னக்குழந்தை, மிகமிக ஆசையோடு எதிர்பார்த்த ஒரு பொருளை வாங்கிக்கொடுக்கும்போது, அக் குழந்தைக்கு ஏற்படும் மகிழ்வோடு, அவன் சண்டைக் களங்களில் உலாவினான்.

எவ்வளவு ஆர்வத்தோடும் திறமையோடும் அவன் அரசியல்துறை வேலைகளைச் செய்தானோ, அதைவிட அதிக ஆர்வத்தோடு அவன் படைத்துறை வேலைகளில் ஈடுபட்டான். அரசியல் வேலைகளைச் செய்யும்போது, ஒரு சிற்றூர் பொறுப்பாளனாக இருந்து பின்னர் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக வளரும் அளவுக்கு அவனுள் இருந்த ஆற்றல், சண்டைகளின்போதும் வெளிப்படத் தவறவில்லை.

நீண்டகாலமாக அரசியல் வேலை செய்துகொண்டிருந்த அவனுக்கு, அந்தச் சண்டைக்களங்கள் புதிய உற்சாகத்தைக் கொடுத்தன. போர் அரங்கிலே ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நின்று...... ஓய்வின்றி உறக்கமின்றி அவன் போரிட்டான்.

* * *

ஜோனி –
1969 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் திங்கள் 19 ஆம் நாள் பிறந்தான்.

அப்பாவும் அம்மாவும் இவனுக்குச் செல்லமாக இட்ட பெயர் ஜெகதீஸ்வரன். குடும்பத்தில் 3 ஆண்களும் 4 பெண்களுமாக 7 உடன்பிறப்புக்களுக்குப் பின்பு, இவன் பிறந்தான். இவனுக்குப் பின்பு ஒரு தங்கை. எவருடனும் அதிகம் பேசாத சுபாவமுடைய ஜோனி, ஆடம்பர வாழ்வு முறைக்கும் புறம்பானவனாக இருந்தான்.

மீசாலை இவனது ஊர். வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற இவனுக்கு, சமூகத்திற்குச் சேவை செய்யவேண்டும் என்ற சிந்தனையும் ஆர்வமும், இயல்பாகவே இருந்தன. சின்ன வயதிலிருந்தே பொது வேலைகளில் ஈடுபடுவான். மீசாலையின் புழுதி படிந்த தெருக்களில், வயல் நிலங்களில், தோட்டவெளிகளில்...... எங்கும் அவனது சேவை பரந்திருந்தது.

பாடசாலையில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் திறமைமிக்கவனாக ஜோனி இருந்தான். அங்கு மாணவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

**அந்த நீண்ட சண்டை முடிந்தபோது... எங்கள் ஜோனி வரவில்லை; முதல் நாள் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப் போல.**

# கொதி நிலையில் இந்திய சாம்ராச்சியம்

**1992,** மார்கழி 6ஆம் திகதி, உலகின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பிய பாப்ரி மசூதித் தகர்ப்பும்,

இதைத்தொடர்ந்து – இந்திய முஸ்லிம்களைப் பீதிக்குள்ளாக்கும் விதத்தில் எழுந்த இந்து – முஸ்லிம் கலவரமும்.

இக்கலவரங்களின் விளைவாக இந்திய தேசத்தையே உலுக்கிவிட்ட பம்பாய் தொடர் குண்டுவெடிப்புகளும், இந்திய வரலாற்றிலேயே மிகமோசமான விளைவுகளைக் கொடுத்த – கொடுக்கப்போகின்ற சம்பவங்களாக அமைந்துவிட்டன என்பது பரவலான கருத்து.

இந்த வன்முறைச் சம்பவங்களுடன் பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிப்படையான மதவாத அரசியலும், ஆளும் கட்சியான இந்திரா கொங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்துள் தோன்றியுள்ள நெருக்கடிகளும், தமிழ்நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும் ஒன்றுசேர்ந்து, இந்திய சாம்ராச்சியத்தை ஒரு கொதிநிலைக்குக் கொண்டுசென்றுள்ளன.

பாப்ரி மசூதி தகர்க்கப்பட்டதிலிருந்து எழுந்த வன்முறை அலைகளில் சிக்கி, சுமார் 2000 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்; 6000 பேர் காயமடைந்துள்ளனர் என, இந்தியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இதில், இந்து - முஸ்லிம் கலவரங்களில் மட்டும் 1700 பேர் உயிரிழந்துள்ளனர். 5000 பேர் காயமடைந்துள்ளனர். மீதிப்பேர் குண்டுவெடிப்புகளில் கொல்லப்பட்டனர். இம் மதக்கலகம் இந்தியாவின் நுழைவாயில் என அழைக்கப்படும் பம்பாய் நகரிலேயே மிக மோசமாக நடந்துள்ளது. 'மராட்டிய' அல்லது மகராஷ்டா என அழைக்கப்படும் மாநிலத்தின் தலைநகர்தான் பம்பாய். ஒருகோடி மக்கள் தொகையைக் கொண்ட பெருநகரம் இது. இதில் 15 வீதத்தினர் முஸ்லிம்களாவர்.

இக் கலகங்கள் ஓய்ந்தபின் 12-03-1993 அன்று பம்பாய் நகரை உலுக்கிய தொடர் குண்டுவெடிப்புகள், முஸ்லிம் தீவிரவாதிகளால் தான் நடாத்தப்பட்டுள்ளன என்பது, இப்போது தெளிவாகியுள்ளது. இக் குண்டுவெடிப்புகள் முஸ்லிம்களின் படுகொலைகளுக்குப் பதிலடியாகவே நிகழ்ந்துள்ளன என்பது தெளிவு. இக் குண்டுவெடிப்புகளின் பின்னால் பாகிஸ்தான் இருந்துள்ளது என இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

**இந்து மத உணர்வைக் கொழுகொம்பாகக் கொண்டு இந்திய சாம்ராச்சியத்தின் கிரீடத்தை அடைய, பா. ஜ. கட்சி பகீரத முயற்சி செய்கின்றது.**

இந்தியாவிலுள்ள 'பிரிவினைவாதிகளுக்கு' பாகிஸ்தான் ஆயுத உதவி அளிக்கின்றது என்ற இந்தியாவின் குற்றச்சாட்டுக்களுடன், பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா உதவுகின்றது என்ற பதில்குற்றச்சாட்டுகளும் தொடுக்கப்பட்டு வருகின்றன.

இரு பகுதியினரின் குற்றச்சாட்டுகளிலும் உண்மை உண்டு என்பதே, பொதுவான கருத்து.

ஆனாலும், இப் பிராந்தியத்தில் தான் ஒரு முடிசூடா மன்னனாக இருக்கவேண்டும் என்ற மேலாதிக்கவாத இலட்சியத்திற்காக, அருகிலிருக்கும் தேசங்களின் ஸ்திரத்தன்மையை ஏதாவது ஒருவகையில் குலைத்துவிடுவது இந்திய அரசின் ஒரு வெளிவிவகாரக் கொள்கையாகவே இருந்து வருகின்றது என்பதும், தென்னாசியப் பிராந்திய மக்கள் அறிந்த ஒன்று.

இந்தியாவில் மசூதி தகர்ப்பும் முஸ்லிம்கள் மீதான வன்முறையும் நடைபெற, இதற்குப் பதிலடியாக, அயல் முஸ்லிம் நாடுகளில் இந்துக்கோயில்கள் தகர்ப்பும் இந்துக்கள் மீதான வன்முறையும் நடந்தன.



நரசிம்மராவ்

**இன்றைய சூழ்நிலையில், கட்சி எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்காக, தலைமையைச் சிதையாமல் வைத்திருக்கவே, நொண்டிக் குதிரையானாலும் ராவை கொங்கிரஸ் வண்டியில் பூட்டித் தள்ளிக்கொண்டு செல்கிறார்கள்.**

இந்திய உபகண்டத்தில் இந்து - முஸ்லிம் கலவரங்கள் நடைபெறுவது புதிய விடயமல்ல.

ஆனால், இன்று அது ஒரு புதிய அரசியல் பரிமாணத்துடன், இந்திய அரசியல் அரங்கில் எழுச்சிபெற்றுவரும் சக்திமிக்க ஒரு அரசியல் கட்சியின் விருப்பத்தின் பேரில் நடைபெறுகின்றது என்பதுதான், புதியவிடயம்.

இந்த மாற்றம் இந்திய சாம்ராச்சியத்தின் ஆயுளைக் குறுகச் செய்துவிடும் என்பது, பலரது கருத்து,

இந்து மத உணர்வைச் சுக்கானாகப் பிடித்துக்கொண்டு இந்திய அரசியல் சமுத்திரத்துள் வேகமாகச் செல்லும் ஒரு கப்பலாக, பாரதிய ஜனதாக் கட்சி வளர்ந்து வருகின்றது.

## உலகவலம்

'இந்தியா இந்துக்களுக்கே' என்ற கோஷத்துடன், இந்திய அரசின் மதசார்பின்மைக் கோட்பாட்டை மாற்றி, ராமராச்சியம் அமைக்கும் நோக்குடன், பா. ஐ. கட்சி பல்வேறு உப அமைப்புகள்கொண்டு செயற்படுகின்றது. இதனுடைய அரசியல் நிலைப்பாட்டை பெருமளவு வட இந்திய இந்துக்கள் ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.

534 இடங்களைக்கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில், 1984 ஆம் ஆண்டு, பா. ஜ. கட்சி ஆக இரண்டேயிரண்டு இடங்களை மட்டுமே வைத்திருந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை 1989ஆம் ஆண்டு 89 ஆக அதிகரித்தது 1991ஆம் ஆண்டு 119 ஆக அதிகரித்துள்ளது. இப்போது ஒரு தேர்தல் நடைபெறுமாக இருந்தால் இந்த எண்ணிக்கை 170 ஆக அதிகரிக்குமென, 'இந்தியா டுடே' சஞ்சிகை கருத்துக்கணிப்புச் செய்து, ஆரூடம் கூறியுள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சி பெற்றுவரும் இந்த அரசியல் ஸ்தானம் அதன் இந்துத்துவ கொள்கைக்கு மட்டுமல்ல, சர்ச்சைக்குரிய அதனது செயற்பாடுகளுக்கு இந்திய மக்கள் மத்தியில் கிடைத்துவரும் அங்கீகாரத்தையுமே காட்டுகின்றது.

இவ்விதம் இந்துமத உணர்வைக் கொழுகொம்பாகக் கொண்டு இந்திய சாம்ராச்சியத்தின் கிரீடத்தை அடைய பா.ஜ.கட்சி பகீரத முயற்சி செய்கின்றது.

இதேவேளை ஆளுங்கட்சியான இந்திரா கொங்கிரஸ் கட்சி இன்று ஒரு நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ளது. கட்சியின் தலைவரும் பிரதமருமான திரு.நரசிம்மராவை பதவியிறக்கவேண்டும் என்ற பிரச்சினை எழுந்துள்ளது.

இந்திய அரசியல் வானில், பெரும்புயலாகக் கிளம்பியுள்ள பாரதீய ஜனதாக் கட்சியினது சவாலை எதிர்கொண்டு வெல்லக்கூடிய ஒருவராகவோ அல்லது இந்தியாவின் பரப்பளவைப் போலவே பிரச்சினைகளையும் கொண்ட சாம்ராச்சியத்தின் கிரீடத்தை உறுதியுடன் சுமக்கும் வல்லமையோ பிரதமர் ராவுக்கு இல்லை என்பது, அவரது அதிருப்தியாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரும், முன்னாள் மத்தியப் பிரதேச முதலமைச்சருமான அர்ஜுன் சிங்தான் அதிருப்தியாளர்களின் தலைவர் ஆவர்.

மதத்தை அரசியலுள் கலக்கும் கட்சிகளைத் தடைசெய்யவேண்டுமென இவர் கருத்துக் கூறியிருந்தார். ஆனால், மதத்தையும் சாதியத்தையும் அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் அரசியல் கட்சிகள் (இந்திரா கொங்கிரஸ் உட்பட) அரசியல் நடாத்துகின்றன. எனவே இந்திய மக்களது அரசியல் தலைவிதியை பெருமளவு நிர்ணயிக்கும் மதத்தையோ சாதியத்தையோ அரசியலிலிருந்து தூக்கி வீசிவிடுவதென்பது, இந்தியாவில் இயலாதது.

பிரதமர் ராவ் தொடர்ந்தும் பதவியில் நீடிக்கவேண்டும் எனக் கோருவோர் ராவின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளார்கள் எனக் கூற முடியாது. இன்றையநிலையில், வெளியிலிருந்து கட்சி எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகள் மத்தியில், கட்சித் தலைமைப் பீடத்திலும் பிளவுகள் ஏற்படுமானால் அது கட்சியின் எதிர்கால நலனைப் பாதிக்கும் என்பதாலேயே, ராவ் தொடர்ந்தும் பதவியிலிருப்பதை ஆதரிக்கின்றனர்.

மசூதித் தகர்ப்பைத் தொடர்ந்து பா.ஜ. கட்சி ஆட்சி செய்த மூன்று மாநிலங்களின் அரசுகளையும் ராவ் அரசு கலைத்துவிட்டது. இன்னும் ஒருவருடத்தில் அந்த மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறும் அந்தத்தேர்தலில் கொங்கிரஸ் கட்சி தனது முழுப்பலத்தையும் ஒற்றுமையுடன் பயன்படுத்தி, வெற்றி பெறவேண்டும். இல்லாவிடின் இந்தியநாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல்களை நடாத்தவேண்டிவரும். அப்படியான நிலையில் ஒரு பொதுத்தேர்தல் நடந்தால் கொங்கிரஸ் கட்சி தோல்வியையே தழுவவேண்டிவரும் என கொங்கிரஸ் நலன்விரும்பிகள் கருதியதன் விளைவே, நொண்டிக் குதிரையானாலும் ராவை கொங்கிரஸ் வண்டியில் பூட்டி, தள்ளிக் கொண்டு செல்லுகின்றார்கள்

இவைகள் இப்படியிருக்க, தமிழ்நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் இந்திய அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன அ.தி.மு.க.+ கொங்கிரஸ் கூட்டுமுறிந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் சில அரசியல் மாற்றங்கள், தமிழ்நாட்டுத் தேர்தல் களத்தை கொதிக்கிளறி பண்படுத்தத் தொடங்கியுள்ளன.

பா.ஜ.கட்சி தமிழ்நாட்டில் வேரூன்ற எடுத்துவரும் முயற்சிகளும், தி.மு.க. நடாத்திய மாநில மாநாடும், கட்சிகள் கூட்டுச்சேர்வதற்கான வதந்திகளும் மறுப்புகளும், கட்சித் தொண்டர்களின் தீவிரமான செயற்பாடுகளும் இவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

**தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கான 'விதைப்புக் காலம்' தொடங்கிவிட்டது. 'இந்தி எதிர்ப்பு' என்ற விதையை தி. மு. கவும், அ. தி. மு. கவும் வெவ்வேறு அளவுகளில்–பரிமாணங்களில் – விதைத்துள்ளன. அறுவடையை யார் செய்யப்போகின்றார்கள்?**


சுருக்கமாகச் சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கான 'விதைப்புக்காலம்' தொடங்கிவிட்டது.

'இந்தி எதிர்ப்பு' என்ற விதையை தி.மு.கவும், அ.தி.மு.கவும் வெவ்வேறு அளவுகளில் - பரிமாணங்களில் - விதைத்துள்ளன.

அறுவடையை யார் செய்யப்போகின்றார்கள் எனத் தெரியவில்லை.

எது எப்படி நடந்தாலும், தமிழ்நாட்டுத் தமிழனிடம் எழும் மொழி உணர்வும் இன உணர்வும் அரசியல்வாதிகளின் அதிகாரப் பசியுடன் தணிந்துவிடும் என்பது, சோகமான பழைய வரலாறு ○

# நூல் அறிமுகம்




புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள் (Women Fighters of Liberation Tigers) என்ற பெயரில்–ஆங்கில மொழியில் – ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கத்தின் மகளிர் படையணியினது வரலாற்றுப் பிறப்பையும், அதன் படிநிலை வளர்ச்சிகளையும், அதுகொண்டிருக்கும் ஒப்புவமையற்ற – தனித்துவமான – போர் வரலாற்றையும் இந்நூல் தெளிவாகச் சித்திரிக்கின்றது.

புலிகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட பெண்கள் படையணியின் பிறப்பிற்கும், அதன் உன்னத வளர்ச்சிக்கும், சாதனைகளுக்கும் பின்னால் இருக்கும் 'பிரபாகரன்' என்ற பெருமனிதனின் வரலாற்றுப் பங்கையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தலைமைதாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கத்துடன் அணிதிரண்டுள்ள தமிழீழப் பெண்கள், இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற வரலாற்று உண்மையை, இந்நூல் வலியுறுத்திக் கூறுகின்றது.

அத்துடன், ஆயுதப் போராட்டத்தின் பிறப்பிற்கு முன்பு நடைபெற்ற அகிம்சை வழிப் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்கள் தீவிர பங்களிப்புகளைச் செய்து, தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உரம் சேர்த்திருக்கின்றார்கள் என்ற உண்மையையும் எடுத்துக்கூறி, ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழீழப் பெண்கள் வழங்கி வரும் உன்னத பங்கை, இந்நூல் உலகிற்கு நிறுவிக் காட்டியுள்ளது.

இத்தகையதொரு பின்புலத்திலிருந்து எழுதப்பட்ட இந்நூல், பெண் போராளிகளது போர் வரலாற்றையே பிரதானமாகச் சுட்டிக்காட்டுகின்றது.

போர்க்களங்களில் பெண்புலிகள் காட்டிவரும் போர்த்திறன்களையும், உலகே வியக்கக்கூடிய அளவுக்கு எங்ஙனம் புலிகள் இயக்கத்தின் பெண்கள் படையணி ஒரு இராணுவ வளர்ச்சியைப் பெற்றது என்பதையும், இந்நூல் ஆழமாக எடுத்து விளக்குகின்றது.

1986ஆம் ஆண்டு, மன்னார் அடம்பனில் பெண் புலிகள் பங்கு கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது தாக்குதலுடன் ஆரம்பித்து, போரில் புதிய பரிமாணத்தை வெளிக்காட்டிய பலாலிச் சண்டைவரை, மகளிர் படையணியின் போர் வரலாறு இந்நூலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இந்த 6 வருடப் போர் வரலாற்றில் பெண் புலிகளது பங்கும் இதில் அவர்கள் பெற்றுவரும் வெற்றிகளும், பெண்கள் படையணியின் இராணுவ வளர்ச்சியும் ஒரு வரலாற்றுத் தொடர்பில் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

காடுகளில் நடைபெறும் கரந்தடிப் போர்முறையிலிருந்து நேரடிச்சண்டை வரை, பெண் போராளிகள் எப்படிச் சண்டையிடுகின்றார்கள் என்ற தகவல்களை, போர் அனுபவம் வாய்ந்த பெண் போராளிகளைச் செவ்வி கண்டு நூலாசிரியை வெளிப்படுத்தியுள்ளார்.

பழமைவாத சமூகத்தின் அடக்குமுறைக்குள் வாழும் தமிழ்ப் பெண்கள், எப்படி ஆயுதம் தூக்கி பலம் வாய்ந்த இந்திய – சிறீலங்காப் படைகளுக்கு எதிராகப் போர்புரிந்து வெற்றிகளைப் பெற்று வருகின்றார்கள் என்பது, மேற்குலகத்தைப் பொறுத்தவரை ஒரு ஆச்சரியமாகவே இருந்து வருகின்றது.

பெண் போராளிகளிடமிருந்து பெற்ற செவ்விகள், முக்கியமான தகவல்கள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் இப்புத்தகம், மேற்குலகின் ஆச்சரியத்தைப் பெருமளவு தீர்த்துவைக்கும்.

அவுஸ்திரேலியாவைப் பிறப்பிடமாகவும், தமிழீழத்தைத் தனது தாயகமாகவும் வரித்துக்கொண்ட இந்நூலின் ஆசிரியையான அடேல் ஆன் (திருமதி அன்ரன் பாலசிங்கம்), நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்து இயங்கி வருகின்றார்.

1984ஆம் ஆண்டு இவர் 'பெண்களும்புரட்சியும்' என்றதொரு நூலையும் எழுதியிருந்தார். அந்த நூலும் புலிகள் இயக்கத்தின் வெளியீடாகவே (ஆங்கிலத்திலும் தமிழிலும்) வெளியிடப்பட்டிருந்தது. அத்துடன், பெண் விடுதலை தொடர்பாகப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

'புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள்' என்ற இந்நூல், 116 பக்கங்களைக் கொண்டது (படங்கள் நீங்கலாக).

முன்னுரை, முடிவுரை நீங்கலாக எட்டு அத்தியாயங்களில் பெண் போராளிகளது போர்வரலாறு எழுதப் பட்டுள்ளது.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் கருப்பொருளுக்கேற்றாற் போல் நிழற் படங்களும் சேர்க்கப்பட்டு, புத்தகம் ஆக்கப்பட்டுள்ளது.

பெண் புலிகளின் போர் வாழ்க்கையை வெளிப்படுத்தும் 28 நிழற் படங்கள், இதில் இணைக்கப்பட்டுள்ளன.

ஆங்கில மொழி மூலமான இந்த பெண் புலிகளின் போர் வரலாற்று நூல், வெளிஉலக மக்களுக்கு ஒரு சிறந்த நூலாக அமையுமென்பது திண்ணம். ○

# மேஜர் ஜோனி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவனாக இருந்த அவன், திறமையான செயற்பாடுகளுக்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறான்.

இந்திய இராணுவம் எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த அந்தக் காலம், இவனுக்குள் ஒரு புயலையே வீசச்செய்தது. இயல்பாகவே மக்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்ற சுபாவமுடையவனாக இருந்த ஜொனி, அன்றைய நெருக்கடியான நாட்களில், ஊரில் எமது போராளிகளுக்கு உற்ற துணையாக நின்றான்.

வீட்டாரிற்கும் வெளியாட்களுக்கும் தெரியாமல், மறைமுகமாக இயக்கத்திற்கு வேலை செய்துகொண்டிருந்த ஜொனி, 1989இன் முற்பகுதியில் போராட்டத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

இரணைமடுவில் –வன்னியின் அடர்ந்த காடுகளின் நடுவில் – தனது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய இவனுக்கு, எல்லாப் புலிவீரர்களுக்கும் இருப்பதைப் போல, சண்டைக்குப் போகவேணும் என்ற ஆசை இருந்தது.

ஆனாலும், இயக்கம் அரசியல் வேலைகளை வழங்கியபோது, திறமையுடன் அதனைச் செய்யத் தொடங்கினான்.

* * *

எங்கள் தேசத்தில், 1991ஆம் ஆண்டின் சிறப்பான நிகழ்வு அதுதான்.

ஆனையிறவுப் பெருஞ்சமர் .....

அந்த நீண்ட சண்டைகளின்போது, ஜொனி உயிர்த்துடிப்புடன் களங்களில் போரிட்டான்.

அந்தச் சமரின் இறுதி நாட்களில் ஒன்று. ஒரு மாலை நேரம்; ஐந்து மணிப் பொழுது.

எங்கள் காவலரணிற்கு வந்த ஜொனி எம்மோடு மகிழ்ச்சியாகக் கதைத்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் அன்பான உரையாடல். நேரம் போனதே தெரியவில்லை. இருண்டுவிட்டதால் தனது காவலரணிற்குப் போவதற்காக எழுந்தான்.

தட்டுவன்கொட்டிப் பகுதியில் இவனது அரண்கள் இருந்தன. அப்பகுதியின் பொறுப்பாளனாகவும் இவன்தான் இருந்தான்.

எழுந்தவன், திரும்பிச் சொன்னான்...

''என்ர பொயின்ரைக் கடந்து ஆமி வாறதெண்டால், என்ர உடம்புக்கு மேலாலதான் வருவான்''.

அவன் சொல்லிவிட்டுப் போனபோது நாங்கள் எவருமே அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

அன்று இரவு கடந்து மறுநாள் விடிந்துவிட்டது. நேரம் ஓடியது. காலை 11 மணியை நெருங்கியபோது விமானங்கள் இரைய, குண்டுகள் அதிரச் சண்டை தொடங்கிவிட்டது.

ஜொனியின் காவலரண் பகுதியை நோக்கிப் படை நகரத்துவங்கியது. வானிலிருந்து குண்டுகள் பொழிய, எறிகணைகள் கூவிவர, கனரக வாகனங்கள் – கனரக ஆயுதங்கள் சகிதம் எதிரி மெல்லமெல்ல முன்னேறினான். அது ஒரு கடுமையான-மூர்க்கத்தனமான சண்டையாக இருந்தது. தங்களில் சிலர் பிணங்களாய்ச் சரிய, எதிரி அங்குலம் அங்குலமாக நகர்ந்து வந்தான். அந்த நீண்ட சண்டை முடிந்தபோது ..... எங்கள் ஜொனி ..... அவன் வரவில்லை. இன்றுவரை அவன் வரவேயில்லை; முதல் நாள் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப் போல.

ஆனால், அவனோடு பழகிய அந்த இனிய நாட்களின் நினைவுகள் என்றும் எம்மோடு பசுமையாய் வாழும். இந்த இலட்சியப் பயணத்தில் அவனது நினைவுகள், எம்மோடு துணையாக வரும்.

— நிமால் ○

# கிளாலி கடக்க அனுமதியில்லை: சிங்கள அரசின் நோக்கம் என்ன?

'கிளாலி கடல்நீரேரி தடை செய்யப்பட்ட வலயமாக்கப் பட்டுள்ளது. இக் கடற்பாதை யால் எவரும் போக்குவரத் துச் செய்ய முடியாது. இதனை மீறிச் செல்வோர் சுடப்படுவர்' என, அரசு சட்டமியற்றியுள் ளது.

யாழ். குடாநாட்டிற்குள் போகவும் வரவும் இருந்த எல்லா வழிகளையும் இராணு வம் தடுத்து நிற்பதால், வேறு மார்க்கம் எதுவுமின்றி கிளாலி கடற்பாதையூடு மக்கள் பய ணிக்கத் தொடங்கியபோது, இந்தத் தடை உத்தரவு சிங்கள அரசால் பிரகடனப்படுத்தப் பட்டது. ஆனாலும், புலிகள் இயக்கம் பாதுகாப்பு வழங்க கடற்பயணம் தொடர்கின்றது. இருந்தாலும் அரசின் இந்தத் தடை உத்தரவையும் மீறி, கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத்பெர்னாண்டோ அவர் கள், கிளாலியூடாகத் துணிகர மாக யாழ்ப்பாணம் சென்று திரும்பினார். கிளிநொச்சிக்கு அப்பால் செல்லத் தனக்கு அனுமதியளிக்கப்படாத நிலை யிலும் அவர் யாழ்ப்பாணம் சென்று வந்தது, கொழும்பு ஆட்சிபீடத்தினரையும் பௌத்த பேரினவாதிகளையும் சீற்ற மடையச் செய்தது. அவர்களின் சீற்றத்திற்குக் காரணம் சிங்கள அரசின் தடைச்சட்டத்தை மீறி யமையல்ல.


தமிழர்களின் துயரங்களை வெளி உலகத்திற்குச் சொன்ன துடன், தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்து, அவரது சமாதான நல் லெண்ண முயற்சிகளை வெளிப் படுத்தி, அவரது நேர்மையை யும் கண்ணியத்தையும் வியந்து பாராட்டி, மனந்திறந்து கூறி விட்டார் என்பதுவே உண் மைக் காரணமாகும்.

ஆயர் அவர்களின் பயண அனுபவமும், அவர் கூறிய வியப்பு மிக்க கதைகளும், தலைவர் பிரபாகரனின் சமா தான நல்லெண்ண சமிக்ஞை பற்றிய செய்திகளும், வெளி நாட்டுத் தகவல்துறை நிறுவ னங்களினாலும், கொழும்பின் சில ஏடுகளினாலும் முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு வெளி யிடப்பட்டன.

இதனால் ஆத்திரமடைந்த சிங்களப் பேரினவாதிகள், 'தடைசெய்யப்பட்ட கிளாலிப் பாதையூடாகச் சென்றதற்காக ஆயர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்' எனக் கூச் சல் போட்டனர்.

○ ○ ○

பி. பி. சி. வானொலியின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் திருமதி ஆனந்தி அவர்கள், அதன் கொழும்பு முகவர் சியாக்கா நூசு அவர்களுடன் அண்மையில் வடபகுதி வர,



யாழ்ப்பாணம் வந்திருந்த கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ அவர்களை தலைவர் அவர்கள் சந்தித்தார்.

**தீர்வு காண்பதில் புலிகளுக்குள்ள ஆர்வமும், புலிகளின் தெளிவான அரசியல் நிலைப்பாடும் உலக அரங்கில் வெளிப்பட்டது.**

கூட்டுப்படைத் தலைமையிடம் அனுமதி கோரினார். ஆயர் அவர்களைப் போல, கிளி நொச்சி வரை 'மாத்திரம்' செல்ல அவர்கள் அனுமதிக்கப் பட்டனர்.

ஆனால், கிளாலி கடற் பாதையூடு யாழ்ப்பாணம் சென்ற அவர்கள், யாரும் எதிர் பாராத வகையில் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந் தித்து, அரசியல் முக்கியத்து வம் மிக்க செவ்வியைப் பெற் றனர். வடக்கின் பல பகுதிக ளுக்கும் சென்று, மக்களில் பலதரப்பட்டவர்களையும் சந் தித்துவிட்டுத் திரும்பினர்.

தலைவரின் செவ்வி பி. பி. சி. இன் அனைத்துச் சேவைகளி லும் ஒலிபரப்பப்பட்டது. உல கின் செய்தி நிறுவனங்கள் எல் லாம் அதற்குப் பெரும் முக்கி யத்துவம் கொடுத்தன. புலிக ளின் அரசியல் நிலைப்பாட்டி னையும், அவற்றிற்குத் தலை வர் கொடுத்த தெளிவான விளக்கங்களையும் பி. பி. சி. உலகெங்கும் பரப்பியது.

இச் சூழ்நிலையிலேயே, உலக மக்களின் கேள்விகளுக் குப் பதிலளிக்கும் நிகழ்ச்சி மூலம், பிரேமதாசா அவர்க ளையும் செவ்வி கண்டது.

இவ்விரு செவ்விகளையும் பி. பி. சி. குறுகிய காலத் தில் அடுத்தடுத்து ஒலிபரப் பியதனால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர் பாக புலிகளினதும் சிங்கள அரசினதும் அரசியல் நிலைப் பாட்டினை மக்கள் கேட்டறிந்த னர். இதன்மூலம், இனப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் யார் தடைக்கல் லைப் போடுகின்றார்கள் என் பதனையும், உலகம் கண்டு கொண்டது.

ஆனந்தி அவர்கள் பி. பி. சி. இன் ஆங்கில சேவையில் 'ஆச் சரியம் மிக்க' தமிழர்களின் சோகக் கதைகளை உணர்வு பூர்வமாக விபரித்தார். அதே போல, 'வடபுலம் சென்றேன்; கண்டேன்' என்ற ஒரு தொடர் விவரணத்தை தமிழ்ச் சேவை யில் நிகழ்த்தினார்.

தமிழீழத்தின் உண்மை வாழ் வையும், சிங்கள அரசின் சுய ரூபத்தையும் பி. பி. சி. உல கின் முன் வெளிச்சமாக்கியத னால், அதன்மீது சிங்கள அரசு கடுஞ்சினம் கொண்டி ருந்தது.

அங்கிலிக்கன் ஆயர் அவர் களையும், பி. பி. சி. இன் ஆட் களையும் வடபகுதி செல்ல அனுமதித்ததன் விளைவாகத் தான் பெற்ற தீங்கை யும் - தான் சந்திக்கவேண்டி யிருந்த சிக்கலையும் சிங்கள அரசு மறந்து போகாது. இப் படியான ஒரு சூழ்நிலையில்-

டென்மார்க் தொலைக்காட் சிக் குழு ஒன்று வடபகுதி செல்ல விரும்பியது. வழமை போல 'கிளிநொச்சி வரை மட் டுமே' எனக் கூட்டுப்படை அனு மதி வழங்கியது. அவர்களு டன் கூடவே பி. பி. சி. இன் கொழும்பு முகவர் சியாக்கா நூசு அவர்களும் வந்தார். அவர்களை வவுனியாவைக் கடந்துசெல்ல விடாது படை யினர் தடுத்தனர். கூட்டுப் படைத் தலைமை வழங்கிய அனுமதிப்பத்திரத்தைச் செய்தி யாளர்கள் காட்டிய போதும், பயணம் தடுக்கப்பட்டது. கூட் டுப் படைத் தலைமையிடம் விளக்கம் கேட்கப்பட்டபோது, 'பி. பி. சி. செய்தியாளரை அனுமதிக்க முடியாது - அவ ரைத் தவிர்ப்பதாயின் ஏனைய வர்கள் போகலாம்' என்ற நிபந்தனை, பதிலாக வந்தது. அதன்படி சியாக்கா நூசு அவர்கள் கொழும்பு திரும்ப, டென்மார்க் குழு கிளிநொச்சி வந்தது.

தமிழர்களின் அவல வாழ் வையும், புலிகளின் நியாய மான அரசியல் நிலைப்பாட்டி னையும், சிங்கள அரசின் பித்த லாட்டங்களையும் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தியதற் காக பி. பி. சி. இற்கு வழங்கப் பட்ட பதிலடியாகவே இது இருக்கும். இதே சமயத்தில்- அங்கிலிக்கன் ஆயர் அவர்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் வர முயற்சிகள் எடுக்கின்றார். அவ ரது முயற்சியினைக் குழப்பும் முயற்சிகளும் எடுக்கப்படுகின் றன. முன்னர் அவர் யாழ்ப்பா ணம் சென்றபோது அங்கு கூறி விட்டு வந்தது போல - சர்வ மதப் பெரியார்களையும் அழைத்துக் கொண்டு யாழ்ப் பாணம் போக வேண்டும் என்ற அவரது நல்ல முயற் சிக்கு, பேரினவாதிகளிட மிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

அங்கிலிக்கன் ஆயர் மீண் டும் இங்குவந்து தலைவர் பிர பாகரனைச் சந்திக்காது தடுப்பதில், ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் தீவிரமாக இருக்கின்றார்கள்.


இங்கே இன்னொரு விடய மும் உண்டு -

வடக்கே செல்லமுயலும் செய்தியாளர்களுக்கும் பிரபல் யமான ஆட்களுக்கும், குடா நாட்டுக்குள் செல்ல அரசி னால் அனுமதி வழங்கப்படுவ தில்லை. இதற்கொரு காரணத் தையும் அது சொல்கின்றது. ''யாழ்ப்பாணம் செல்ல பாது காப்பான பாதைகள் எதுவு மில்லை. புலிகள் போக்குவரத் துச் செய்வதால் கிளாலி கடற் பாதையும் தடை செய்யப்பட் டுள்ளது. அதனால், கிளிநொச்சி யுடன் திரும்பிவிடுவதே உங்க ளுக்கு நல்லது'' என்பதுதான் அது. ஆனால், உண்மையில் அதற்கு இரண்டு விதமான காரணிகள் உண்டு.

முதலாவது காரணம் - யாழ்ப்பாணம்செல்கின்ற செய்தி யாளர்களும், முக்கிய ஆட் களும் புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளை - சில சமயங் களில் தலைவர் பிரபாகர னையே - சந்தித்து விடுகின் றார்கள். அதனால், இனப்பிரச் சினைக்கு உருப்படியான தீர் வொன்றைக்காண புலிகள் காட் டும் ஆர்வத்தையும், புலிக ளின் சரியான - தெளிவான அரசியல் நிலைப்பாட்டினையும் பற்றி, அவர்கள் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்திவிடு கின்றனர்.

(11 ஆம் பக்கம் பார்க்)

## மண்ணின் மைந்தன்



**லெப். கார்வண்ணன் (ஒஸ்னஸ்)**

(பொன்னுக்கோண் செல்லக்கோண்)
நிலாவெளி, திருகோணமலை.

பிறந்த திகதி: 03. 08. 1972
வீரச்சாவு: 18. 01. 1993

திருமலையின் மைந்தன் இவன்
நிலாவெளியின் தவப்புதல்வன் இவன்
தாய் மண்ணின் விடுதலைக்காய்
தனைக் கொடுத்த தனயன் இவன்
இளமைக்கு இவனோர் எடுத்துக்காட்டு
எதிலுமே இவனுக்கோர் துடிப்பு உண்டு.

பள்ளிப் பருவத்து இவன் துடிப்பு
வாத்தியாருக்கும் ஒரு கிடுகிடுப்பு
என்றுமே இவனிடத்தில் இன்ப ஊற்று
என்றும் கண்டதில்லை இவனிடத்து கோபக்கீற்று
கல்வி இவனிடத்தில் பெருவிருப்பு
பண்பு இவனிடத்தில் உயிர்ப்பு.

இளமை இவன் துடிப்பும்
தமிழ் மண்ணின் களை இழப்பும்
எதிரிகளின் நெருக்கடியும்
இவன் மனதைத் திருடியதால்
தாய் மண்ணின் நிலைகாக்க
தம்பி இவன் புறப்பட்டான்.

தாய்க்கோர் தலைமகனாய்
தமிழ் மண்ணின் உறுப்பினனாய்
விடுதலை வேங்கை இவன்
விட்டுச் சென்ற பணி பெரிது
விருப்புடனே நாம் அதனை
தொடர்ந்திடுவோம் விடுதலையை.

குழந்தை இவன் குதூகலமாய்
விளையாடிய இவன் மண்ணை
இனவெறி எதிரிகள் மீறியே குடிகொள்ள
இரவினில் வந்து இதமாய்ப்பார்த்து
தமிழ்மண்ணை தரிசித்த தனயனிவன்
வீரமாய் பலமுறை முத்தமிட்டனன்.

செய்யும் இவன் செயலில் வேகம் உண்டு
சொல்லிய செயலை துல்லியமாய்
செய்யும் வீரம் இவனுக்கு உண்டு
களைப்பு என்றும் கண்டதில்லை
மன்னா உந்தன் வீரமரணம் கேட்டு
மண்ணும் ஒருமுறை கலங்கி நின்றது.

வீர சொர்க்கத்தின் விடிவிளக்கே
மானிடப் பிறப்பின் மாணிக்கமே
தமிழ் மண்ணின் தவப்புதல்வா
உன் இழப்பில் நிலா (வெளி) நிலைதடுமாறியதால்
நில மகளும் தன்மைந்தன்
தனக் கெனவே வாதிட்டாள்.

வீரமுடன் தோள் கொடுத்து
விழுப்புண்கள் தாங்கிய உனக்கு
பாரினில் பாடுவோம் பரணி
யானை போல் துஞ்சிய வீரனையே
விஞ்சிவிட்ட எம்வீரன் நீயன்றோ
வீரமுடன் சொர்க்கத்தில் வீற்றிருக்கும்
எம்மைந்தா கண்ணீர் அஞ்சலியை
தருகின்றோம் கவிதையிலே.

தமிழ் மண்ணைக் காக்க
தலை சாய்த்த தலைமகனே
கரம் கூப்பி வேண்டுகிறோம்
(உன்) ஆத்மாவின் சாந்திக்கு.

• இந்த மாவீரனின் சகோதரி எழுதிய கவிதை இது.

# மாகாணசபைத் தேர்தல்கள்

## கட்சிகளது நிலை, நோக்கங்கள் - இலக்குகள்

**மே** 17ஆம் திகதி, சிறீலங்காவில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

இந்தத் தேர்தல் மும்முனைப் போட்டி கொண்டதாக அமைந்துவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியும், இலங்கை தொழிலாளர் கொங்கிரசும் ஒரு முனையிலும்; சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் நட்புக் கட்சிகளும் மறுமுனையிலும்; லலித் – காமினி குழுவினரின் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இன்னொரு முனையிலும்நின்று போட்டியிடுகின்றன.

சுதந்திரக் கட்சியும், ஜ. ஐ. தே. மு. கட்சியும் தமது பொது எதிரியாக ஐ. தே. கட்சியை வரித்துக்கொண்ட போதிலும், இவை இரண்டும் இணைந்து போட்டியிடுவதற்குப் பதிலாக, தனித்தனியே போட்டியிடுகின்றன.

இதேசமயம், ஏதாவது ஒரு சிங்கள தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என எதிர்பார்க்கப்பட்ட முஸ்லிம் கொங்கிரஸ் கட்சி, எதனுடனும் கூட்டுச் சேராது தனித்துப் போட்டியிடுகின்றது.

> மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கு எப்படியிருக்கிறது என நாடிபிடித்துப் பார்க்கும் ஒரு பரீட்சைக் களமாகவே மாகாணசபைத் தேர்தலை எல்லாக்கட்சிகளும் பயன்படுத்துகின்றன.

இ. தொ. கா.வும் தனித்துப் போட்டியிடப்போவதுபோல ஒரு சர்ச்சையைக் கிளப்பியபோதும், ஐ. தே. கட்சியுடனான அதன் உறவை அது முறித்துக் கொள்ளவில்லை.

அதுபோல நீண்டநாளைய நட்புக் கட்சிகளின் கூட்டுடன் போட்டியிடும் சுதந்திரக் கட்சியும் தனித்து தனது தேர்தல் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்று, அக்கட்சியின் சக்திவாய்ந்த பிரிவினராகிய அனுரா குழுவினர் விரும்பினர்.

இவ்விதம் இந்த மாகாண சபைத் தேர்தலில் கட்சிகள் தத்தமது தனித்துவத்தைக்காக்கவேண்டும் என்றதுடிப்பு, ஏன் எழுந்துள்ளது? அதன் நோக்கம் என்ன?

வாக்காளர் மத்தியில் தங்களது கட்சிகளின் செல்வாக்கு எப்படியிருக்கின்றது என்பதை நாடி பிடித்துப்பார்க்க, அநேகமாக எல்லாக் கட்சிகளும் விரும்புகின்றன. எனவே, இந்த மாகாண சபைத் தேர்தலை அதற்குரிய ஒரு பரீட்சைக் களமாகப் பயன்படுத்த, அவைகள் தீர்மானித்துள்ளன.

இந்த சுயபரீட்சை வெறுமனே காரணமில்லாமல் நடைபெறவில்லை.

இந்த !ாகாண சபைத் தேர்தலால் கிடைக்க இருக்கும் பதவி – சுக நன்மைகளைவிட, அடுத்துவர இருக்கும் நாடாளுமன்ற,ஜனாதிபதித் தேர்தல்களில்தான் கட்சிகள் பிரதான கவனம் செலுத்துகின்றன. அந்தத் தேர்தல்களில் கட்சிகளது கூட்டுக்களும், கூட்டுமுன்னணியின் வேட்பாளர்கள் நியமனத்தில் கட்சிகளுக்குரிய வீதாசாரமும், முன்னுரிமையும் எப்படி அமைய வேண்டும் என்ற முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு, மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் பெரிதும் உதவ இருக்கின்றன.

இந்த நோக்கத்துடன்தான், தத்தமது கட்சிகளின் பலத்தை–பலவீனத்தை தனித்தனியே வெளிப்படுத்த அவைகள் முனைகின்றன.

இந்த மாகாணசபைத் தேர்தல் மும்முனைப் போட்டி கொண்டதாக அமைந்ததற்குஇன்னொருகாரணமுமுண்டு.அடுத்து வரவிருக்கும் நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களத்தில் ஐ.தே.கட்சிஎன்ற சண்டைக் கப்பலின் 'கப்டனாக' பிரேமதாசாவே விளங்குவார் என்பது முடிந்த முடிவு. ஆனால், இதற்கு எதிரான கூட்டு முன்னணிக் கப்பலின் கப்டனாக சுதந்திரக் கட்சியின் கொமாண்டர்களில் ஒருவரா அல்லது ஜ. ஐ. தே. மு. கட்சியின் கொமாண்டர்களில் ஒருவரா நியமிக்கப்படவேண்டும் என்பதையும், இம் மாகாண சபைத் தேர்தலின் முடிவுகள் கட்டியம் கூறலாம்.

இ. தொ. கா.வும் ஒரு சுய பரீட்சை மூலம் தனது சுயபலத்தை அறிய அல்லது நிரூபிக்க விரும்பியது. ஆனாலும் அது ஒரு அக்கினிப் பரீட்சையாக அமைந்துவிடக்கூடும் என்ற அச்சமும் அதனிடம் இருந்தது.

இ. தொ. கா. கட்சியிலிருந்து – அண்மைக் காலத்தில் – அநேக இடைநிலைத் தலைவர்கள் வெளியேறியதுடன், இ. தொ. கா.வின் அரசியல் எதிரியான காமினியின் ஜ. ஐ. தே. மு. கட்சியிலும் இணைந்து வருகின்றனர். இதனால் இ. தொ. கா.வின் பலம் குறைந்துவிட்டதோ ? என்ற அச்சம் அதனிடம் இருந்திருக்கலாம்.

அதேவேளை, மலையகத்தைப் பொறுத்தவரை ஐ. தே.கட்சியும், இ.தொ. கா.வும்தான் பலம்வாய்ந்த கட்சிகள்.

> சிறீலங்காவின் எதிர்கால அரசியல் போக்கை நிர்ணயிப்பதாக மட்டுமே அமையும்இத் தேர்தல், தமிழர்களின் அரசியல் பிரச்சினையோடு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாதது.

காமினி திசாநாயக்காவின் ஆளுமைக்கும் செல்வாக்கிற்கும் உட்பட்ட பெரியதொரு தொழிற்சங்கம்தான், மலையகத்தில் ஐ. தே. கட்சியின் பலத்திற்குக் காரணம். இப்போது காமினி புதிய கட்சியைத் தொடக்கியிருப்பதால், முன்னைய ஐ. தே. கட்சியின் பெரும்பான்மை வாக்குகள் காமினியின் ஜ. ஐ. தே. மு. கட்சிக்கே சென்றடையும் என்பது, பரவலான ஒரு எதிர்பார்ப்பு. அத்துடன் முன்னர் கூறியது போல இ. தொ. கா.விலிருந்து பிரிந்து சென்ற கட்சியின் இடைநிலைத் தலை

(11ஆம் பக்கம் பார்க்க)

"நான் வந்துவிட்டேன்!'' இவ்விதம் கூறிய புதிய 'புக்காரா' விமானத்தைப் பார்த்து பழைய பொம்மர் சிரித்தது! 'சியா மாசெட்டி' என்ற பெயரில் அது தமிழீழ வானில் உயரப் பறந்து உலாவிய அனுபவசாலி!.

என்றாலும், எவ்வளவோ எண்ணி வந்த புதிய புக்காராவுக்கு இந்தச் சிரிப்பு ஒரு சூடுபோலப்பட்டது!

''ஏன் சிரிக்கிறாய்?''

''உன்னைப் பார்த்தல்ல, உடன் பிறப்பே! என் முன்னைய எண்ணத்தை எதிர்பார்ப்பை, பட்டறிந்த உணர்வை, மீண்டும் எண்ணிச் சிரித்தேன்'' என்றது அந்த சியா மாசெட்டி.

புக்காராவுக்கு இப்போது சினக்க இயலவில்லை. ஒரு விரும்பாத ஆவலே மேலெழுந்தது! பழைய பொம்மர் தொடர்ந்தது –

''நாங்கள் விமானப் படை! எட்டாத இடமெல்லாம் எம் தாக்கல்கள் எட்டும்! எங்கள் வீச்சிலே கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகும்! எதிர்த்தோர் சிதறிப் பலியாவர்! தமிழீழ மக்கள் சரணடைவர்! –இவ்விதம்தான் நான் எண்ணினேன்'' என முடித்தது சியா மாசெட்டி.

''அப்படியானால்?''

''இன்று என் மனத்திலே சோர்வு தான் உள்ளது. இறகுகள் களைத்துவிட்டன. இந்த அரசின் வெற்றி பிற்போட்டுப் பிற்போட்டு பின்வாங்கி நிற்கிறது!'' என்றது பொம்மர்.

''அதற்குத்தான் நான் வந்துவிட்டேன்!'' எனத் தலை நிமிர்த்திக் குரல் கொடுத்தது புக்காரா. அது எண்ணியபடி மறுநாள் விடிந்தது. பெரும் ஆர்ப்பாட்டத்துடன் வந்த சிலருள் இருவர் அந்த புக்காராவில் ஏறிக்கொண்டனர்.

அது பெரும் இரைச்சலோடு எழுந்து உயர்ந்தது.

பழைய பொம்மர் தனியாக நின்றது; பல நினைவுகள் – உணர்வுகளின் நடுவே அது ஆழ்ந்து நின்றது. வீரம் வேறு; பொய் புழுகு புரட்டுப் பிரச்சார மூலம் வீரம் போலக் காட்டும் பொய்ம்மை வேறு. இந்தப் பொய்களையே தாங்கியபடி தன்னைப் பார்வையிட வந்த தளபதிகள், பெரும் அரசியற் தலைவர்கள் என்போரின் பழைய நினைவுகள் தலைதூக்க முயன்றன.

எதனையும் கவனியாது வெயில் மேலெழுந்து கொண்டிருந்தது. தூரத்து இரைச்சலொன்று நெருங்கி வருவது கேட்டது. ஆம், பெரும் சத்தமிட்டபடி புக்காரா தரையிறங்கி மெதுவாக ஊர்ந்து, மீண்டும் தன் பழைய இடத்தை எடுத்துக் கொண்டது. வியர்வை கொட்டிற்று!

## தமிழீழத் திருநாட்டில்

மீண்டும் புக்காரா – சியா மாசெட்டி தனிமையில் நின்றன.

ஆனால் புக்காராவின் முகத்தில், களிப்போ பெருமிதமோ காணப்படவில்லை. வெறுப்புக் கோபாவேசமே மேவிட்டது!

''வெறும் பொய்! பம்மாத்து!'' இவ்விதம் உரத்த குரலில் கதையைத் தானே தொடங்கிற்று.

''ஏன்?'' இது சியா மாசெட்டியின் கேள்வி. பதில் கூற புக்காரா தயங்கவில்லை–

''இவர்கள் அங்கு – நான் பிறந்த நாட்டில் – வந்துகூறியது வேறு. அதன்படி இங்கு நான் போர்முனைக்குச் செல்லுவதாக எண்ணினேன். ஆனால் இங்கு செலுத்தப்பட்டது போர்முனைக்கு அல்ல ஊர்மனைக்கு! குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் எங்கு தெரியுமா? மக்கள் வாழும் வீடுகளிலும் பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்த பாடசாலையிலும்! பசு ஒன்று உருண்டு துடித்து இறந்தது. மூதாட்டி ஒருத்தி துண்டமாய் மடிந்தாள். தெருவில் நின்ற பொதுமக்களில் சுமார் பத்துப்பேர் பலியானது தெரிந்தது. இதற்குள் புலிப் போராளிகளின் எதிர்க் கணைகள் எழுந்ததும் எனது ஒட்டி தடுமாறிவிட்டான். மற்றவன் பிழையான இடங்களிலெல்லாம் சரியாகப் பொழிந்தான்! அத்துடன் விரைந்து மேலெழுந்து இங்கு வந்துவிட்டனர்!''

''இன்னும் சிறிது நேரத்தில், பன்னிரண்டு பயங்கரவாதிகள் சாகடிக்கப்பட்டனர் என்ற செய்தி வரும், கேள்!'' எனச் சிரித்தது சியா மாசெட்டி. அது தொடர்ந்தும் கூறிற்று –

''காடுகளை அழிக்கவும் அங்குள்ள உயிர் இனங்களை மாய்க்கவும்கூட சிறீலங்கா அரசு எம்மையே பாவிக்கிறது.''

''எங்கு?''

"தமிழீழ மண்ணில் – அது வேற்று நாடு, தனிநாடு என்பதால் –''

வானத்தில் ஓசை பொழிந்தது–தமிழீழம் தனி நாடு தான் என – வானத்தில் ஓசை பொழிந்தது.

எதிர்பாராத மழையொன்றுகொட்டிற்று

அதன் நடுவே பழைய பொம்மர் தன் நெஞ்சத்தின் ஆழத்தினூடாகக் கூறிற்று, ''நான் ஒன்றையே விரும்புகிறேன்.''

''அது என்ன?''

''இந்தப் பொய்யான – அதர்ம – அரசின் பொம்மராய் இருப்பதைவிட, ஒரு புலப்போராளியின் ரைஃபிளாய் இருப்பது மேல். அதனையே நான் மெய்யாக விரும்புகிறேன்.''

வானம் சிலிர்த்து நின்றது!

— நாக. பத்மநாதன்

---

## கிளாலி கடக்க....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது காரணம் – குடாநாட்டிற்குள் செல்கின்ற எவரும் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையின் உச்ச வடிவத்தைக் கண்டுவிடுவார்கள்; அதன்மூலம் சிங்கள அரசின் கொடூர அடக்குமுறையை உலகமும் கண்டுவிடும் என்ற அச்சம்.

மனித இரை தின்ன அலைந்து திரியும் இயந்திரச் சுறாக்களுக்கும், வானில் வட்டமிடும் இயந்திரக் கழுகுகளிற்கும் மத்தியில், இலட்சக் கணக்கான மக்கள் உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் கடற்பயணத்தை, அவர்கள் வெளியில் சொல்லுவார்கள். அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில், அன்றாடம் சீவிக்கவே அல்லலுறும் மக்களின் வாழ்வைப்பற்றிய தகவல்களை, அவர்கள் வெளிப்படுத்துவார்கள். இவ்வளவு நெருக்கடிகளுக்கு உள்ளாகிய போதும், போராட்டத்தில் உறுதிகொண்டு, மக்கள் புலிகளின் பின்னால் அணிதிரண்டு நிற்பதை, அவர்கள் வெளிப்படுத்துவார்கள். இவ்வாறாக, உண்மை விபரங்களை, வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் சர்வதேச மட்டத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும். இது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அனுதாபத்தைத் தேடிக் கொடுத்துவிடும் என்பதுடன், சிங்கள அரசையும் சிக்கலில் மாட்டவைத்துவிடும் என, ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

மேலே நாம் பார்த்தது – கிளிநொச்சிக்கு அப்பால் செல்ல அரசு அனுமதியளிக்காததன் காரணங்கள். கிளிநொச்சிவரை செல்வதற்கென்றாலும் அரசு அனுமதிப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. 'வடக்கே செல்லும் யாராவது ஒரு வெளிநாட்டுச் செய்தியாளர் – யாழ்ப்பாணம் போகாமல் – அரைகுறைத் தகவல்களைப் பெற்றுச் சென்று புலிகளுக்கு எதிராக ஏதாவது சொல்ல மாட்டாரா' என, சிங்கள அரசு படும் ஆதங்கம்தான் அது.

அதனால்தான் நிலைமையின் ஆழ – அகலத்தைச் சரிவரப் புரிந்துகொண்டு உண்மைத் தகவல்களை வெளியிட்டவர்களுக்குப் பயணத் தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டு, புதியவர்களுக்கு மாத்திரம் 'கிளிநொச்சி வரை' என அனுமதியளிக்கிறது. அந்த வகையில் இம்முறை டென்மார்க் தொலைக்காட்சிக் குழு. வழமைபோல இதுவும் கிளாலியூடு யாழ்ப்பாணம் வந்தது.

இவர்களும் தமிழர்களின் இன்னல்களை, அவர்களின் போராட்ட நியாயப்பாட்டை, அவர்களின் சரியான – தெளிவான – அரசியல் நிலைப்பாட்டை வெளி உலகிற்குச் சொன்னால், அதாவது உண்மைத்தன்மை பிசகாமல் தகவல்களை வெளியிட்டால், அடுத்த தடவை வவுனியாவோடு திரும்பவேண்டி ஏற்படலாம்.

---

## மகாணசபை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும், அவர்களது ஆதரவாளர்களும் ஐ. ஐ. தே. மு. விலேயே இணைந்துமுள்ளனர். இதனால் ஐ. ஐ. தே. மு. மலையகத்தில் பலத்துடன் இருப்பதாக நம்பப்படுகின்றது.

இந்த நிலையில் தனித்துப் போட்டியிடுவதென்பது, இ. தொ. கா.வுக்கு பாதகமாக அமையும். அது போல ஐ. தே. கட்சிக்கும் அது தோல்வியையே கொடுக்கும். எனவே, தனித்தனியாக பலப் பரீட்சையில் இறங்குவதைவிட கூட்டாகப் போட்டியிடுவதில்தான் இரு கட்சிகளினதும் நலன்கள் தங்கியிருக்கின்றன. எனவேதான், இ. தொ. கா. வும்ஐ. தே. கட்சியும் தங்களது கூட்டைத் தொடருகின்றன.

இவை ஒருபுறமிருக்க, இந்த மாகாண சபைத் தேர்தல்களிலிருந்து வடக்கு – கிழக்கு மாகாண சபைகளைச் சிங்கள அரசு விலக்கிவைத்துள்ளது.

சிறீலங்காவின் உள்நாட்டு அரசியல் நடைமுறையிலிருந்து தமிழரின் தாயகமான வடக்கு – கிழக்கு அந்நியப்படுத்தப்பட்டுள்ளது என்பது, இங்கு குறிப்பிடத்தக்கது. 1977 ஆம் ஆண்டிலிருந்தே இந்த அந்நியம் இருந்து வருகின்றது.

சிறீலங்காவின் அரசியல் முறையிலிருந்து தமிழர் மாநிலம் பிரிந்து செல்வதையே இது குறித்துக் காட்டுகின்றது. அதாவது, தமிழீழ மக்கள் தங்களது அரசியல் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்க வேண்டுமென்ற கருத்தை, இந்தச் சூழ்நிலை வலியுறுத்துகின்றது.

அதேசமயம், தென் தமிழீழத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தவேண்டும் என, முன்பு பிரேமதாசாவின் அரசு திட்டமிட்டிருந்தது. அதற்காக அங்கே பெருந்தொகையில் இராணுவத்தையும் குவித்தது. ஆனால் புலிகளின் ஆதிக்கம் இப்பகுதியில் தொடர்ந்தும் இருப்பதாலும், தென்தமிழீழ மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்கலாம் என்ற அச்சமும் இந்த முயற்சியை இறுதிநேரத்தில் கைவிடத் தூண்டியது.

இதேவேளை, நடக்கப்போகும் தேர்தல் தமிழர்களின் அரசியல் பிரச்சினையோடு எந்தவித சம்பந்தமுமில்லாதது. அதேவேளை, இத்தேர்தலின் முடிவுகள் சிறீலங்காவின் எதிர்கால அரசியல் போக்கை நிர்ணயிப்பதாக அமையும்.

# கசியும் தகவல்கள்

## பாதுகாக்கப்பட வேண்டியவைகளல்ல என நாம் கருதுபவைகளே, சிலவேளைகளில் தேசத்தின் மிகப்பெரிய இரகசியங்களாகவும் இருக்கும்!

**'காட்டிக் கொடுத்தால் கற்பூரம் தருவினமாம்; கற்பூரம் எரிப்பதற்காக நாம் காக்கைவன்னியன் ஆவதா?**

▷▷▷▷▷▷▷▷▷▷▷▷

▷▷▷▷▷▷▷▷▷▷▷▷

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியில் மக்கள் பார்வைக்கென வைக்கப்பட்டிருக்கும் ஒரு அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ள வாக்கியம் இது.

சிங்கள அரசால் தடைசெய்யப்பட்ட பொருட்களை வவுனியா பாதையினூடு உள்ளே கொண்டுவர அனுமதி தேவையாயின் 'புலிகளைப் பற்றி தகவல் தாருங்கள்' என பயணிகளிடமும் - வியாபாரிகளிடமும் படையினர் கேட்கின்றனர்.

இன உணர்வற்ற சில கோடரிக் காம்புகள் படையினர் விரிக்கும் ஆசை வலைக்குள் வீழ்ந்து கற்பூரத்திற்காகவும், 'ரோச் பற்றி'களுக்காகவும், மண்ணெய்க்காகவும் பெறுமதியான பல தகவல்களை எதிரிக்கு வழங்கி, எமது விடுதலைப் போராட்டத்திற்குத் தீங்கிழைக்கின்றனர்.

இதைக் கருத்திற்கொண்டு இரத்தினச்சுருக்கமாகவும் இலக்கியநயம்படவும் எழுதப்பட்ட ஒரு வாக்கியம்தான், மேற்குறித்த சுலோகம் ஆகும்.

குறள் பாணியிலான இவ்வாறான பல சுலோகங்கள் அண்மைக்காலத்தில் குடாநாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுவருவதுடன், ஆங்காங்கே உள்ள அறிவித்தல் பலகைகளிலும் எழுதப்பட்டுள்ளன.

மக்கள் அரங்கு என்ற மாபெரும் சமுத்திரத்துள் மக்களுக்கு மக்கள் முகத்தையும், எதிரிக்கு எதிரி முகத்தையும் காட்டும் ஒருசில மனிதவிலங்குகளையிட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென, அந்தச் சுலோகங்கள் தூண்டுகின்றன.

தமிழீழத்தில் நிகழ்த்தப்படும் ஒரு விமானத்தாக்குதலின் பின்னால் அல்லது ஒரு இராணுவ நடவடிக்கையின் பின்னால், சில ''தமிழர்களே'' (உளவாளிகள்) சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற கசப்பான உண்மையை, தமிழீழ மக்கள் முதலில் மனதில் வைத்திருக்க வேண்டும்.

இந்த உளவாளிகள் குறித்த இடத்திற்கு நேரடியாகச் சென்று தகவல்களைச் சேகரித்து எதிரிக்கு வழங்குவதென்பது மிகக்குறைவு.

அப்பாவித்தனமாகவும் பொறுப்பற்றமுறையிலும் போராட்ட நடவடிக்கைகளைப்பற்றிக் கதைக்கும் மக்களிடமிருந்தே பெரும்பாலும் உளவாளிகள் தகவல்களைப் பெற்று, மீண்டும் அதை உறுதிப்படுத்தி எதிரிக்கு வழங்குகின்றனர்.

உளவாளிகள் எனும்பொழுது அவர்கள் எங்கோ தொலை தூரத்தில் இருந்து அல்லது அடுத்த ஊரிலிருந்து வருகின்றார்கள் என, நினைக்கவேண்டாம். உங்கள் அயலிலேயே ஒரு உளவாளி இருக்கலாம். உங்கள் பாடசாலை நண்பனது / நண்பியினது உறவினர் ஒருவர் உளவாளியாகவும் இருக்கலாம்; அல்லது நீங்கள்வேலை செய்யும் இடத்தில் / வேலைத்தளத்தில் ஒரு உளவாளியும் வேலை செய்யலாம். இவ்விதம் உளவாளிகள் எங்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இருக்கலாம். ஆனாலும் அவர்களுக்குத் தேவையான தகவல்களை, தங்களையும் அறியாமல் மக்களே வழங்குகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் உண்மையை, மக்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆகவே மக்கள் எச்சரிக்கை உணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் இருந்து தங்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை, புலிகள் இருப்பிடங்களை மற்றவர்களுக்குக் கூறாது இரகசியம் காப்பதன்மூலம், தகவல்கள் எதிரியிடம் சென்றடைவதைப் பெருமளவு தடுக்க முடியும்; இதனால் அழிவையும் துன்பத்தையும் கணிசமாகத் தவிர்க்கலாம்.

பெரும்பாலும் 'ஊர்ப்புதினங்கள்' என்ற ரீதியிலேயே, இரகசியமாக இருக்கவேண்டிய தகவல்கள் பரகசியப்படுத்தப்படுகின்றன. போராட்ட நடவடிக்கைகளையும் ஒரு 'புதினமாக'- செய்தியாகக் - கருதி, மக்கள் அவற்றையும் மற்றவர்களுடன் கதைக்கின்றபோதே தகவல்கள் பரவுகின்றன.

நண்பர்கள் கதைக்கும்போதும், உறவினர்கள் சந்திக்கும்போதும், நாட்டுநடப்புக்கள் பற்றிய கதைகள் எழும்போதும், விழிப்புணர்வும் எச்சரிக்கை உணர்வுமின்றித் தங்களுக்குள் 'புதினங்களைப்' பகிர்ந்துகொள்கின்றனர்.

இத்தகைய சம்பாஷணைகளில் ஈடுபடுபவர்களிடம் எந்தவிதமான துரோக சிந்தனைகளும் இருக்காது.

தாங்கள் கதைக்கும் 'புதினங்கள்', உளவாளிகளின் காதுகளைச் சென்றடையக் கூடாத 'இரகசியத் தகவல்கள்' என்ற உண்மையையும் பலர் புரிவதில்லை. இதற்கொரு காரணமும் உண்டு.

பொதுவாக 'இரகசியம்' என்பது, இருவருக்குள் இருக்கும் விடயமென்றோ அல்லது விரல்விட்டெண்ணக் கூடிய ஒருசிலருக்குள் இருக்கும் விடயமென்றோதான், பெரும்பாலான மக்கள் கருதுகின்றார்கள்.

இந்த எண்ணப்பாட்டின் காரணமாகவே, குறித்த ஒருபகுதியில் அல்லது ஒரு பிரதேசத்தில் மக்கள் பலர் அறியத்தக்கதாக நடைபெறும் போராட்ட நடவடிக்கை ஒன்றை இரகசியமானது அல்ல என எண்ணுகிறார்கள். இதனால் அந்தப் போராட்ட நடவடிக்கையைப் பற்றித் தமது நண்பர்களுடனும் உறவினர்களுடனும் எந்தவித தயக்கமுமின்றிக் கதைக்கின்றனர்.

**கேட்டால், 'அது இரகசியமானதில்லையே'.**
**'ஊர்ச்சனம் எல்லாம் அறிந்ததுதானே!'**
**'அது ஆமிக்கு தெரிஞ்சிருக்குமே' என, ஊகித்துப் பதில் கூறவும் முனைகின்றனர்.**

மக்களின் சிந்தனை இப்படியாக இருக்கும் போதுதான் பலரறியக்கூடியவாறு போராட்டத் தகவல்கள் பரவி, ஒரு கட்டத்தில் அவை உளவாளிக்கும் சென்று, இறுதியில் எதிரியிடமும் சென்று சேர்ந்துவிடுகின்றன அதனால் வரும் அனர்த்தங்களை சில காலங்களின் பின் மக்களும் புலிகளும் அனுபவிக்கின்றனர்.

உண்மையில் பெரும்பாலான மக்கள் கருதுவதுபோல அவ்வளவு சுலபத்தில் 'இரகசியத்திற்கு' வரையறையைக் கூறிவிடமுடியாது.

காலம், சூழல், நடவடிக்கையின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப 'இரகசியம்' என்ற சொல்லின் பொருளும் அதன் கனபரிமாணமும் விரிந்து செல்லும்.

ஒரு நடவடிக்கை இரகசியமானது என்றால், அந்த நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் எல்லாரும் சேர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு, தகவல்கள் வெளியில் செல்லாதவாறு பேணவேண்டும். ஒருவர் எச்சரிக்கை உணர்வில்லாமல் நடந்துகொண்டாலும் தகவல்கள் எதிரியைச் சென்றடைந்துவிடும்.

''நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் எல்லாரும்'' என்பதன் அர்த்தம் -

அது இருவராகவும் இருக்கலாம்; விரல்விட்டு எண்ணக்கூடிய சிலராகவும் இருக்கலாம் அல்லது ஒரு ஊரின் மக்களாகவும் இருக்கலாம்; மாவட்டத்தின் மக்களாகவும் இருக்கலாம் அல்லது ஒரு நாட்டின் மக்களாகவும் இருக்கலாம். இவ்விதம் குறித்த பகுதியினர் அனைவரும் இணைந்துதான் தகவல்கள் கசியாது பாதுகாக்கமுடியும்.

சிலர் தாங்கள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லித் தங்களை உயர்த்திக் காட்டுவதற்காக, தங்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை மற்றவர்களுக்கும் கூறுகின்றனர். அதேவேளை இரகசியம் என்று தெரிந்திருந்தும், மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாது என்று உணர்ந்தும், சிலர் 'கதைருசி'யில் தகவல்களைப் பகிரங்கப்படுத்தி விடுகின்றனர்.

இன்று எமது மண்ணில் உக்கிரமாக ஒரு விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது.

இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னர் புலிகள் இயக்க அங்கத்தவர்களிடம் மட்டும் இருந்த போராட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள், இன்று மக்கள் அரங்குவரை விரிந்துவிட்டன.

மக்களும் போராட்ட நடவடிக்கையின் ஒரு அங்கமாக மாறிவிட்டனர்.

எனவே, புலிகள் இயக்க உறுப்பினர்கள் பேணிய தகவல்கள் இன்று மக்களும் சேர்ந்து பேணவேண்டிய இரகசியமாக மாறிவிட்டது.

எனவே, ஒரு போராட்ட நடவடிக்கை மக்களுக்குத் தெரியக்கூடியவாறு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அது பேணப்பட வேண்டிய இரகசியம் என்பதை, மக்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இந்த விடுதலைப்போர், களத்தில் வெற்றிவாகை சூடவேண்டுமாயின் சிறந்த தந்திரோபாயங்களும், உன்னத அர்ப்பணிப்புக்களும் தேவை. இவை மட்டும் இருந்தால் போரை வென்றுவிடலாமா? இல்லை.

இந்தப் போர்த்தந்திரங்களும், உயரிய அர்ப்பணிப்புகளும் பெரு வெற்றியைத் தேடித்தர வேண்டுமாயின் இரகசியம் காப்பது மிக முக்கியம். இல்லாவிடின், தந்திரோபாயங்களும் பலிக்காது; உயிர் அர்ப்பணிப்புகளும் அர்த்தமற்றுப்போகும்.

எனவே தமிழீழத்தின் குடிமக்கள் - அது மாணவர்களாக இருந்தாலும் சரிதான், வளர்ந்தவர்களாக இருந்தாலும் சரிதான், உங்களுக்குத் தெரிந்த போராட்ட நடவடிக்கைகளை- புலிகளின் நடமாட்டங்களை - மற்றவர்களிடம் கதைக்காது இரகசியம் பேணவேண்டும் அதே சமயம், சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒருவரது நடவடிக்கை அமையுமானால் உடனடியாக புலிகளின் முகாமுக்கு அறிவிக்கவும்.

**மண்ணைக் காதல் செய்வோம்**
**மறவர் தினம் போற்றிடுவோம்**
**எம்மை மறந்து எதனையும் பேச மாட்டோம்.** ○

### அன்பான தமிழீழமக்களுக்கு!

போராட்டத்தின் வளர்ச்சி கருதியும், தேசத்தின் நன்மை கருதியும் எமது இயக்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் எழுகின்ற ஐயப்பாடுகளை நீக்கும் நோக்குடன், அவற்றிற்குத் தெளிவான விளக்கங்களை வழங்க உத்தேசித்துள்ளோம்.

எனவே உங்களது ஐயப்பாடுகளை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வெளியீட்டுப் பிரிவு,
அரசியல் துறை, நடுவப்பணியகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**